


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் புன்னகை

முகில்வாணனின்

சொற்கோலம்

வெளியீடு :

Publisher

සාමදාන சமாதானம்
SAMADANA/M

National Centre For Promoting Non-Violent Conflict Resolution & Conflict Handling

Towards a Non-Violent People's Movement

No. 89, Tekkewatta, Tennekumbura, Kandy-Sri Lanka.
Tel: +94-81-2240320, Fax: +94-81-2240087
E-mail: samadana@sltnet.lk Web: www.samadana.org

ISBN 978-955-1372-08

978955137208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

தென்றலைப்போல்
அமைதியாய்
அனைவருக்கும்
பொறுமையைப்
போதித்த
அமரர் வைத்திய
சிகாமணி,
கணபதியார்
சின்னத்தம்பியாகிய
என் தந்தைக்கு
காணிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : அமைதியின் புன்னகை
ஆசிரியர் : முகில்வாணன்
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
முதல் பதிப்பு : 23.08.2011
தொடர்புகளுக்கு : S. Nimalraj
8/1, Adigar Road,
Batticaloa.

J. Rasappah
Kupfer STR 12,
41564 Kaarst
Germany.
rasappah@googlemail.com
விலை : ரூபா. 200
**ISBN** : 978-955-1372-08-8
அச்சகம் : வணசிங்கா பிரின்டர்ஸ்,
126/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ....

பக்க இலக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வாழ்த்துரை | v |
| 2. | அணிந்துரை | viii |
| 3. | சிறப்புரை | xvii |
| 4. | கோலவாயில் | xxi |
| 5. | ஒரு தென்றல் | 01 |
| 6. | தேடுவோம் | 07 |
| 7. | உடன் உறவுகள் | 13 |
| 8. | மண்ணும் மானமும் | 21 |
| 9. | வெல்லும் சொல் | 30 |
| 10. | உண்மையின் கனி | 34 |
| 11. | நம்பிக்கை | 40 |
| 12. | ஜதார்த்தம் | 45 |
| 13. | இல்லச்சுத்தம் | 57 |
| 14. | வேற்றுமை வேண்டாம் | 66 |
| 15. | நெஞ்சே நினைத்துப்பார் | 71 |
| 16. | நேற்று நாளை இன்று எங்கே? | 80 |
| 17. | நீங்கள் யார்? | 84 |
| 18. | பரிணாம வளர்ச்சி | 93 |
| 19. | ஏன் இந்த யுத்தம் | 97 |
| 20. | யுத்தம் | 107 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. திரும்பிப்பார் 114

22. மகிழ்ச்சியை தரிசியுங்கள் 118

23. வாலிபரே 122

24. ஊமைகளின் மௌனம் 125

25. உலகத் தீமையைத் தூக்காதே 131

26. ஒரு மெல்லிய புன்னகை 135

27. துன்பப்படும் தூயவர்கள் 140

28. நிழல்கள் அல்ல நிஜங்கள் 146

29. விடுதலையின் குரல்கள் 149

30. மனிதம் விடுதலை அடையும் 156

31. ஆயுதத்தை அல்ல அன்பைத் தேடுங்கள் 161

32. நீதிமான்களைத் தேடுங்கள் 166

33. மகிழ்ச்சி மரணிப்பதில்லை 169

34. மயான பூமி 173

35. இளங்கதிர்களே எழுந்து வாருங்கள் 176

36. விடிவு இருளுக்கு முடிவு 184

37. மறுபடி பிறப்பீர்களா? 190

38. மனிதத்தை விடுதலை செய்யுங்கள் 193

39. சாகாத தத்துவம் 200

40. யாரிடம் செல்வோம் யாரோடு சேர்வோம் 205

41. ஆசிரியரின் பிறநூல்கள் 216




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன
(சர்வோதயத்தலைவர்)
Vishualeka.
13.09.2002

## வாழ்த்துரை

காலத்தின் கண்ணாடிதான் இலக்கியம்.
இலக்கியம் சக்திவாய்ந்த ஊடகம்.
இன்றைய உலகத்தின்
மனிதர் வாழ்நிலையை,
அரசியல் ஆட்சி முறையை,
அதனால் ஏற்படும் விளைவுகளை
இலக்கியம் ஊடாகத்தான்
அறிய முடியும். அந்தவகையில்
திரு முகில்வாணன் இராசப்பா அவர்கள்
இன்றைய உலகின் வாழ்நிலையை
"அமைதியின் புன்னகை" எனும்
தனது நூலூடாகப் படம் பிடித்துக்
காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு முகில்வாணன் தனது
கோல வாயில் ஊடாக
அமைதியை விரும்பும்
அன்புள்ள வாசகர்களே
எனத் தொடங்கி,
"ஆட்சியாளர்களாக
அனைவரும் வரலாம்
தகுதியில்லாத
தலைவனின்
பின்னே செல்வோர்
அழிவார்கள் என்பது
வரலாறு"
என்று கூறுகிறார்.

நாளை மலரவிருக்கும்
சமாதான உலகத்தை,
„உலகம் முழுவதும்
வெளுத்து வருகின்றது,
காடுகள் எல்லாம்
வெளிச்சமாகிவிட்டன,

ஜாதிக்கொரு
கொடி வேண்டாம்
வீதிக்கொரு
கட்சி வேண்டாம்
மதத்துக்கொரு
கதிரை வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்துக்கொரு
நாடு வேண்டாம்
உலகை நேசியுங்கள்
சமாதானத்தைப் பேசுங்கள்
அன்புதான் மதம்,
அன்புதான் மொழி,
அன்புதான் இனம்,நாடு,
உலகம் என
அழுத்திச் சொல்கிறார்.

உண்மையில்
சமாதானப் பிரியரான
திரு முகில்வாணனின்
அமைதியின் புன்னகை
சமாதானத்தை விரும்பும்
அனைத்து உள்ளங்களையும்
கவர்ந்திருக்கும்.

இவரது நூல் மிகப் பயனுடையது.
யாவரும் வாங்கிப் படித்துப் பயன
டைய வேண்டும்.
திரு முகில்வாணனின் இவ்வகையான
பல நூல்களை எழுதி வெளியிட
வேண்டுமென யாசிக்கிறேன்.

கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன.
சர்வோதயத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி வே. அ. ஜா.அழகரசன்.
எம் ஏ.பி.எச்.டி.(சென்னை.)
எம்.ஐ.வி. (ஹவட்)
பி.எச்.டி. (அரிசோனா)
அமெரிக்கா
10.07.2011

## அணிந்துரை

உலகம் எங்கும்
நாம் நோக்கும் போது
வன்முறை
தாண்டவமாடுவதைக்கண்டு
மனம் வருந்துகின்றோம்.
என்ன செய்வது என்று
தெரியாமல் தவிக்கிறோம்.
"இருளைப் பழிப்பதை விட
ஒளியை ஏற்றுவது மேல்"
என்ற பொன் மொழிக்கேற்ப,
கவிஞர் முகில்வாணன்
நாம் அமைதியைக்
கொண்டுவர ஏதாவது
இம் மண்ணுக்கு செய்ய
வேண்டுமென நினைத்து
"அமைதியின் புன்னகை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூலைப்
படைத்துள்ளார்.

“புன்னகையே அமைதியின்
முதற்படி” என்று
நோபல் அமைதிப்பரிசு பெற்ற
புனிதவதி அன்னை தெரேசாள்
கூறுவது போன்று,
இந்நூலின் ஆசிரியரும்
பல கோணங்களிலிருந்து
அந்த உண்மையை
நிரூபித்துக்காட்டுகின்றார்.
“உடன் உறவுகள்” என்ற
கவிதையில்
தாம் இளம் வயதில்
பல சமயத்தினருடனும்,
பல இனத்தவருடனும்,
கள்ளம் கபடமின்றி பழகிய
இனிய உறவுமுறைகளை
நினைத்துப்பார்க்கிறார்.

“நான் பிறந்த காலத்தில்
சிங்களவர் என்றும்
இஸ்லாமியர் என்றும்
பேதம் இருந்ததில்லை.
சீனி முகமதும்
சின்னத்தம்பி வைத்தியரும்
கரவாகு வட்டைக்குள்
களவட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடடிக்கும் போது
எனது அம்மாவும்
பாறுக்கின் உம்மாவும்
எங்களுக்கு
சோறு பிசைந்து தந்ததை
நினைத்துப் பார்க்கிறேன்”
என்கிறார்.

அன்பின் வழிதான்
அமைதியின் வழி.
ஆயுதத்தைவிட,
அதிகாரத்தைவிட
ஆற்றல் மிக்கது.
அன்பின் வழிதான்
உறுதியானது,
நிலையானது என
அறைகூவல் விடுகின்றார்.

ஒவ்வொருவரும் தங்கள்
உள்ளத்திலும், சொல்லிலும்,
உலக உறவிலும், உண்மை
உள்ளவர்களாக, தூய்மை
உள்ளவர்களாக வாழ்ந்தால்
அது அமைதிக்கு வித்திடும்
என பல இடங்களில்
சுட்டிக்காட்டுகின்றார்.

“நீதியின் பொருட்டு
துன்புறுத்தப்படுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறுபெற்றோர்,
அமைதி ஏற்படுத்துவோர்
பேறுபெற்றோர்” என்ற
யேசுவின் மலைப்பொழிவுக்
கருத்துக்களும்
ஆங்காங்கே மின்னி
ஒளிவிடுகின்றன.

நூலாசிரியர் சொல்லுகிறார்
நீங்கள் உண்மையான
சமாதானத்தைத்
தேடுபவர்களாக இருந்தால்
நீதியின்பால் தாகமுள்ள
அறிவாளிகளைத்தேடுங்கள்
என்கிறார்.
கொலைகாரர்கள்,
பயங்கரவாதிகள்,
உள்ளொன்றுவைத்து
புறம் ஒன்று பேசுகிறவர்களோடு
உறவு வைக்காமல்
சமாதனத்தைத்
தேடுகிறவர்களோடு,
சமாதானத்துக்காக
உழைப்பவர்களோடு சேரும்படி
வேண்டுகோள் விடுக்கின்றார்.
இயற்கை அழகில்
தன்னையே மறந்த கவிஞர்,
இயற்கையில் காணும்
அமைதியைக்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் படைப்பின்
மணிமகுடமாகிய மனிதன்
அதனிடம் இருந்து பாடம்
கற்றுக்கொள்ள முடியாதா?
என ஒரு வினாக்குறி
எழுப்புகிறார்.

“பச்சை வயல்களை
பரந்த வானத்தை
உயர்ந்த மலைகளை
ஓடக்கரைகளை
ஒருதரம் உற்றுப்பாருங்கள்
உள்ளத்தில்
அமைதி பிறக்கும்.
பால்கொடுக்கும்
பசுவின் முகத்தையும்
பராமரிப்பே இல்லாமல்
பாதை ஓரத்தில்
பூத்திருக்கும் மலரையும்
பாருங்கள்
இவைகளில் எதுவும்
வெறியை விரும்பியதும்
இல்லை
விதைத்ததும் இல்லை
இவைகள் அனைத்தும்
தம்முடைய மகிழ்ச்சிக்காக
இன்னொருத்தரின் உயிரை
பறித்ததே இல்லை.
நீங்களும் ஏமாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இனத்தின்
எதிர்காலத்தையும்
ஏமாற்றாதீர்கள்” என
அறிவுரை கூறுகிறார்.
அன்பு, நீதி, கனிவு, இரக்கம்
புரிந்துணர்வு போன்ற
மனித நேயப்பண்பாடுகளை
வாழ்க்கையில் கடைப்பிடிக்க,
இளைஞர்களையும்,
தலைவர்களையும்,
மக்களையும் கேட்கிறார்.
வேறுபாடுகளையும்,
பிரிவினைகளையும் மறந்து
அன்பு,கருணை,மன்னிப்பு
இறைப்பற்றுப்போன்ற
உயர்ந்த பண்புகளை
அணிகலன்களாக அணிந்து
கொண்டு வாழ்ந்தால்
அமைதிகிடைக்கும்
என்கிறார்.

“ஜாதிக்கொரு கொடி
வேண்டாம்.
வீதிக்கொரு கட்சி
வேண்டாம்.
மதத்துக்கொரு கதிரை
வேண்டாம்.
இனத்துக்கொரு நாடு
வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை நேசியுங்கள்.
கலகம் நிறுத்தப்படும்.
சமாதானத்தை பேசுங்கள்
சண்டை நிறுத்தப்படும்.
ஒருவருக்கொருவர்
விட்டுக்கொடுங்கள்
நாடு கட்டியெழுப்பப்படும்
அன்புதான் மதம்
அன்புதான் மொழி.
அன்புதான் நாடு.
அன்புதான் உலகம்.
அன்புதான் சாகாத தத்துவம்.
அனைவரின் சுயத்தையும்
மதியுங்கள்
அன்பைப் பகிருவோம்
வாருங்கள்." என
அனைவரையும் அழைக்கிறார்..

"வாளை எடுப்பவன்
வாளினால் மடிவான்" என்று
யேசு சொன்னார்.
விவிலியத்துள் வாழும்
முகில்வாணன்
அழுதழுது
பிராத்தனை செய்து
கேட்கிறார்.

"மீண்டும் இந்த
ஆயுத அதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம் பெறுமேயானால்
நாங்கள் மட்டுமல்ல
நீங்களும் ஒருநாள்
இந்த ஆயுதத்தினால்
கொல்லப்படுவது நிச்சயம்."
என்ற வாக்கு நாடுகளில்
நிறைவுபெற்று வருவதைக்
காண்கின்றோம்.

நம்முடைய குறுகிய
மானிட வாழ்க்கையில்
ஆயுதங்களை மறந்து
அன்பு வாழ்க்கை நடத்த
ஆணைவிடுகின்றார்.
ஆயுதங்களினால் உண்டாகிய
அகோர விளைவுகளை
வரிசைப்படுத்திக்காட்டுகின்றார்.

குவலயத்தில் மீண்டும்
குழந்தைகளாக
நாம் பிறக்க வேண்டும்.
அப்போதுதான் அவனியில்
அமைதிப்புன்னகை பூக்கும்..

நம்மிடம்
மூச்சு இருக்கும் வரையும்
இறைவனின் பெயரால்
"அமைதி அமைதி" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூக்குரலிடுவோம்
அமைதிப்புன்னகை பூக்க
அனைவரும் உழைத்திடுவோம்.
வாழ்க கவிஞர்!
முகில்வாணனின் இந்த
அரிய அமைதிப்படைப்பு
பல உள்ளங்களைத்தட்டி
எழுப்பி
அமைதிக்காக உழைக்க,
வாழத் துணை செய்வதாக.

அன்பன்
அழகரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

# சிறப்புரை

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்.**
கவுன்ஸில் உறுப்பினர், சமாதானம்,
சமூகஜோதி, அகில இன நல்லுறவு ஒன்றியம்.
பணிப்பாளர், மட்டக்களப்பு ஊடக இல்லம் இன்ரநியூஸ்.
செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம்.
செயலாளர், கிழக்கிலங்கை ஐக்கிய சமூக நல அபிவிருத்தி அமைப்பு.
பணிப்பாளர்சபை உறுப்பினர், மட்டக்களப்பு வண்ணத்துப்பூச்சி சிறுவர் சமாதானப் பூங்கா.

■

உலகம் தறிகெட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கின்ற வேளையில் திருவாளர் முகில்வாணன் அவர்களின் **"அமைதியின் புன்னகை"** நூல் வெளியாகிறது. சிறைப்பட்ட சிந்தனைகளைச் செதுக்கி- செல்நெறிகளாய்ச் செப்பனிட்டுச் சிந்திக்கத் தந்திருக்கிறார் இந்த நூலாசிரியர். நின்று நிதானித்து உற்றுப்பார்க்க வைக்கும் இவரது கருத்துக்கள் வெறும் வார்த்தை ஜாலங்களோ நடைமுறைக்குப் பொருந்தாத விடயங்களோ அல்ல. படித்தவரும் பாமரரும் படிப்பினை பெறவேண்டிய பொக்கிஷம் இது. இளைஞர்களுக்கும் இனி ஜனனிக்க இருப்போருக்கும் இது ஒரு வேத நூல். எல்லோரும் இன்புற்று இயற்கையோடு இணைந்து வாழும் வழிமுறைகளை எடுத்தியம்புகிறது இந்த நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை பாராட்டுக்களைக் கூறினாலும் இந்த முயற்சிக்கு ஈடாகாது.

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே என்பதற்கு நூலாசிரியரின் புனிதமான சிந்தனைகள் அற்புதமாய் சொற்பதமாய் சுடரொளியாய் நம்பிக்கையைத் தோற்று விக்கின்றன. பசு மரத்தின் வேருக்குப் பாறை நெகிழ்ந்து கொடுப்பதைப் போல வன்முறையை நன்முறையால் வெற்றி கொள்ள விரும்பும் இந்நூலின் சத்தான கருத்துக்கள் உத்தமமானது என்பதிலே எனக்கு உடன்பாடுண்டு.

எதையும் இன மத மொழி வேறுபாட்டை அடிப்படை யாக வைத்து எடைபோடுகின்ற ஒரு பயங்கரமான காலகட்டத்திற்குள் நாமும் நமது எதிர்கால சந்ததியும் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ள ஒரு சூழ் நிலையில் அந்த ஆபத்திலிருந்து நம்மையெல்லாம் விடுவிக்கும் அரு மருந்தாக இந்நூலில் பொதிந்துள்ள கருத்துக்கள் திகழ்வதையிட்டு நான் நிறைவும் நிம்மதியும் அடைகின்றேன்.

இந்நூலிலிருந்து ஒன்றை எடுத்து மேற்கோள் காட்ட முயற்சித்த போது நான் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதில் தோல்வி கண்டு விட்டேன். ஏனெனில் அத்தனையும் முத்தான முத்துக்கள்தான். எதை எடுப்பது எதை விடுவது என்பதில் எனக்குள் பெருங் குழப்பம். எனினும் ஏக்கப் பெருமூச்சாய் எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை நோட்டமிட்டது என் உள்ளத்ததைத் தொட்டது. ”குருவிகளின் கொஞ்சலையும், மழலைகளின் மொழியையும், காற்றின் கானத்தையும் காது கொடுத்துக் கேளுங்கள். மகிழ்ச்சியின் வித்து எதுவெனப் புரியும். சமாதானத்தின் சாயல் மனதிலே பதியும். பச்சை வயல்களை, பரந்த வானத்தை, உயர்ந்த மலைகளை, ஓடக்கரைகளை ஒரு தரம் உற்றுப்பாருங்கள்- உள்ளத்திலே அமைதி பிறக்கும். பால் கொடுக்கும் பசுவும், பராமரிப்பில்லாத பாதை யோரப் பூவும், பால்போன்ற நிலவும் வெறியை விரும்பி விதைத்ததில்லை, அடுத்தவரின் உயிரை அழித்த தில்லை” எனும் அவரது ஆழ்ந்த ஞான அறிவுரைகள் அற்புதமானவை. கெட்ட பகை வளர்க்கும் பேதமும் மோதலுமின்றிச் செழித்திருக்கும் மனித நேயத்தைக் கடைப்பிடித்துச் செயற்படுத்தும் சூழ் நிலைக்கான சிந்தனைகளை நூலாசிரியர் ஏற்படுத்தித் தந்திருக் கின்றார்.

உண்ணவும் பருகவுமே நீ உதடுகளைத் திறக்கலாம் என்ற உலுத்தர்களின் உறுமலை ஓரந்தள்ளி விட்டு உண்மைகளை ஓர்மையாய் ஊரறியச் செய்யும் இந் நூலால் உங்களுக்கும் எங்களுக்கும் எல்லோருக்கும் ஏற்றமும் பெருமையும்தான்.

ஆழத்தில் அடைபட்டுக் கிடந்து அவ்வப்போது வெளிவரும் நீர்க்குமிழி போல மனிதம் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணித்து விடவில்லை என்பதற்கு இந்நூலும் நூலாசிரியரும் சிறந்த சாட்சிகள். இந்நூலில் பொதிந்துள்ள நூலாசிரியரின் தூய சிந்தனையும், சீரிய செயல்பாடும், சிதைந்து போயுள்ள சமாதானத்தை உயிர்ப்பிக்கும் என்று நாம் திடமாக நம்பமுடியும். அமைதிக்காக ஏங்கி நிற்கும் அவரது ஆத்ம பலம் அனைவரது உள்ளங்களையும் ஊடறுத்துச் செல்ல வேண்டும். அனைவருக்கும் நேர்வழி கிடைக்கட்டும்.

பாராட்டுக்குரிய படைப்பு, வாழ்த்துக்குரிய முயற்சி,

வாழ்க ! வளர்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோல வாயில்

அமைதியை விரும்பும்
அன்பு வாசகர்களே!
நம்பிக்கையோடு இருங்கள்,
நீங்கள் தேடும்
நிம்மதியின் காலம்
நெருங்கி இருக்கிறது.

நாம்
ஒருவருக்கொருவர்
அன்பை
அனுபவிக்க விடாது
தடுத்திருந்த
அந்த கொடிய காலம்
மாறி வருகிறது..

அநியாயக்காரர்களின்
கண்களுக்குத் தென்படாதபடி
அந்த அமைதியின் நாள்
வரப்போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் புன்னகை
ஒளியின் உயிர்,
நம்மை விட்டு
இனியொருபோதும்
ஓடி மறையாது.
துன்பப்பட்ட
நமது வீடுகளுக்குள்
நிரந்தரமாகவே
தங்கப்போகின்றது.

மண்டை ஓடுகளையும்,
எலும்புக் கூடுகளையும்
சாம்பல் மேடுகளையும் தாண்டி,
இளம் பனியில் மதாழிக்கும்
இன்ப உலகம்
அடையாளம் காட்டப்படும்.
அறுபது ஆண்டுகளாய்
அவதியுற்ற
தாய்க் குலத்தின் கருப்பைகள்,
ஆச்சரியத்திலும்
அக்களிப்பிலும்
துள்ளிக் குதிக்கப் போகின்றன.
அமைதி மலரப் போகிறது.
ஆறுதல் கனியப் போகிறது.
மண்ணில்
மாற்றம் பிறக்கப் போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமை
பூத்த சேதியை
பூமியின்
கடைசி எல்லை வரைக்கும்
காற்று
காவிச் செல்லப் போகிறது.
பல வருடங்களாக
காத்திருந்த காலம்
தீர்ப்பெழுதப் போகிறது.
நமது துயருக்கொரு தீர்வு
வரப்போகின்றது.

அனைத்து இனத்தவருக்கும்
அமைதியைக் கொண்டுவரும்
அந்த அற்புத நாளுக்கு
ஆயத்தமாக,
இந்த நூலை
நம்பிக்கையோடு
படைத்திருக்கின்றேன்
படித்துப் பாருங்கள்.

உலக அமைதிக்காக
உழைத்துவரும்
உலகத்தலைவர்களுக்குள்
ஒருவராக கணிக்கப்படும்
சர்வோதயத் தலைவர்
கலாநிதி மேதகு
ஏ. ரி. ஆரியரத்ன அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு வாழ்துரை வழங்கி
மதிப்பிட்டு பெருமைப்படுத்தியுள்ளார்,

உலக மறைகளின் பேராசிரியர்
கலாநிதி மேதகு அந்தனி யோன்
அழகரசன் அடிகள்
அணிந்துரை அருளி சிறப்பித்துள்ளார்.

சிந்தனைத்தென்றல்
வைத்திய கலாநிதி
உயர்திரு செந்தி அவர்கள்
அட்டைப்படத்தை வரைந்து
மேலும் மெருகூட்டித் தந்துள்ளார்.

சமாதானப் பிரியர்
அமைதிக்காய் உழைப்பவர்
இன ஒற்றுமைக்காய்
அனைத்து அமைப்புக்களோடும்
இணைந்து அயராது உழைக்கும்
என் அன்புக்கினிய நண்பன்
A.H.A ஹுஸைன் அவர்கள்
சிறப்புரை எழுதி
பெருமைப்படுத்தியுள்ளார்.
வணசிங்கா அச்சகத்தார்
சிறந்த முறையில் அச்சிட்டு
அழகுபடுத்தியுள்ளார்கள்.
அவர்கள் அனைவருக்கும் நன்றி.
நெருக்கடியான காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உடன் இருந்து
என் துயரில் பங்கெடுத்த
எனது மனைவி ஐறினுக்கும்,
எனது மக்களுக்கும்
எனது நேசத்துக்குரிய
ஜோன் அண்ணனுக்கும்
என் நன்றி.
இந்நூலை வெளியீட்டு வைக்கும்
சமாதானம்
முறன்பாட்டுத் தீர்வுக்கான
அகிம்சை முறையை மேம்படுத்தும்
தேசிய நிலையத்தாருக்கும்
என் கோடி நன்றி உரித்தாகட்டும்.

இவ்வண்ணம்
முகில்வாணன் இராசப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தென்றல்

புன்னகை,
விலங்குகளில் இருந்து
மனிதர்களை
வேறுபடுத்திக் காட்டுகின்றது.

வலிந்த சிரிப்புக்கும்
உள்ளம்
கனிந்த சிரிப்புக்கும்
ஒரு கோடி
வித்தியாசங்கள் உண்டு.

அகமொன்றி
எழும் சிரிப்பு
தன்னையும் மகிழ்விக்கும்,
கூட இருப்பவர்களையும்
மகிழ்விக்கும்.

மடியிலே தவழும்
மழலையின் சிரிப்பு
மனதைவிட்டு
நீங்குவதே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியின் இரும்பு
இதயத்தைக்கூட,
ஒரு குழந்தையின்
பொக்கு வாய்ச் சிரிப்பு
இளகவைக்கும் என்பார்கள்.

ரசிக்கத் தெரிந்த
ஒருவரால் மட்டுமே
சிரிப்பை
அனுபவிக்க முடியும்.
மனித உருவில்
சிரிக்கத் தெரியாத
மிருகங்களும் உண்டு.



சிரிப்பை வெறுப்பவன்
ஆரோக்கியமான
மனிதனல்ல,
அவன்
மன நோயாளி.

இனிமையான சிரிப்பு
கடுமையான வார்த்தைகளை
உச்சரிக்க,
ஒரு போதும்
அனுமதிக்காது.

சிரிப்புத்தான்
மனிதனை மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து இணைந்து
வாழக் கற்றுக்கொடுக்கும்
ஆரம்பப் பாடசாலை.

மனிதனை மனிதன்
நம்ப வேண்டும் என்ற
நம்பிக்கை விதையை
அதுவே பயிராக்குகின்றது.

இனிய சிரிப்பு
குறைகளையும் கறைகளையும்
கழுவித் துடைத்துவிடும்.
அது
வார்த்தைகளை விடவும்
வலிமை வாய்ந்தது.

உன்னை நான்
நேசிக்கிறேன் என்பதை
மௌனமாக
உரத்துச் சொல்லுகிறது.

நட்பை வளர்க்கும்
நாகரீக
மனிதர்கள் அணியும்
மிக உன்னதமான
அணிகலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை
ஒவ்வொருவர் முகத்தையும்
மலரைப்போல்
மதாழிக்கவைக்கிறது.

அது
மாசற்ற அன்பின்
பாசத்தைக் காட்டும்
அடையாளச் சின்னம்.

ஒவ்வொரு சிரிப்பும்
அடுத்தடுத்துப் பேசுவதற்கு
அழைப்பு விடுக்கிறது.

அது
போருக்கு எதிரானது.
சமாதானத்தை
தேடிக்கொண்டிருப்பது.

கொலைகாரனும்,
கொள்ளைக்காரனும்,
கொடியவனும்
சிரிப்பது சிரிப்பல்ல,
அது
வஞ்சகத்தின்
வலை வீச்சாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபடும், சூதும்,
சூழ்ச்சியும்
நிறைந்த மனத்தில்,
கருணையும், காருண்யமும்
குடியிருக்க முடியாது.

கொடியவரின்
கோரப் போரினால்
கருகிப் போயிருக்கும்
மனித முகங்களைப் பாருங்கள்.
அவர்கள் புன்னகை
தொலைந்த இடம் எங்கே?

வாடிய பயிரைக் கண்டதும்
வாடினேன் என்ற
உயர் பண்பாடு
இன்று எங்கே?

உயரிய நம்
பண்பாட்டின் விழுமியங்களை
போர்
விழுங்கிக்
கொண்டிருந்ததல்லவா?

அன்போடு கூடிவாழ்ந்த
இனக் குழுக்களின்
அக்களிப்பை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்
சமாதான சன்னிதானத்தில்
தரிசிப்போம்.
நாம்
மனம் விட்டு
மறுபடியும்
ஒன்று சேர்ந்து
சிரித்து வாழுவோம்.

புன்னகையைவிட
உயர்ந்த பரிசு
உலகத்தில்
எதுவுமே இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடுவோம்

அப்புகாமியும்
அலியாரும்
நானும்
ஒரு தாயின் உறவை
சரி சமமாய்
பகிர்கின்றோம்.

தேசம்
தழுவும் காற்றை
சரி சமமாய்
சுவாசிக்கின்றோம்..

முக்காடு போட்டு
முகங்களை மறைத்து
மூக்கை அடைத்து
காற்றைத் தடுக்க
எங்களால்
முடியவில்லை.
நாங்கள்
வாழ விரும்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசக் காற்றுக்கும்
சுவாசக் காற்றுக்கும்
பாசமில்லையா?

நான் விட்ட
மூச்சுக் காற்றை
அவர்களும்,
அவர்கள் விட்ட
சுவாசக் காற்றை
நானும்
வாங்காத நாட்கள்
வரலாற்றில் உண்டா?

யார் யாரோ தொட்ட
கடலலையை,
நாம் தொட்டு
மகிழ்ந்ததில்லையா?

நாடு தழுவி
எறிக்கும் இந்த
ஒளியின் கீற்றை
நாங்கள்
பார்க்கக் கூடாதா?
காற்றுக்கும்
தென்னங் கீற்றுக்கும்
காதல் வருவது பாவமா?
எந்த வரையறைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களை
அடக்கிவைக்கப்
போகின்றீர்கள்.

எங்கள் மூதாதேயரின்
எலும்புகளில் எலும்பாய்,
இரத்தமும் வியர்வையும்
தோய்ந்த கரங்களால்
கழுவித்
தொடைக்கப்பட்ட
திருமுகமல்லவா
இத்திரு நாடு.

பாழியும் தமிழும்தான்
சிங்களமானது.
அராபியமும்
சேர நாட்டுத் தமிழும்தான்
வடகிழக்கு இஸ்லாமியத்
தமிழர்கள் ஆனது.

காலங் காலமாக
கட்டி எழுப்பப்பட்ட
உறவு முறைகளுக்குள்
காயங்கள்வரக்
காரணம் யார்?

ஒரு மொட்டுக்காகவும்,
ஒரு சிட்டுக்காகவுமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடு
கட்டி எழுப்பப்பட்டது?

பதவி தேடி
உயிரைப் பறிக்கும்
கொடிய அமைப்பா
அரசமைப்பு?
சிங்கமும், சிறுத்தையும்,
ஓநாயும், ஓணானுமா
நம் தேசியம்.

மானிடமில்லாத
மலட்டுப்
பூமிக்குப் பெயரா
தாயகம்.

புன்னகை தொலைந்த
பூமியை புதுப்பிக்க
மண்ணில் மானிடம்
தேவையில்லையா?

அரசியல் வாதிகளின்
நடிப்பிலும்,
ஆயுத வாதிகளின்
அழைப்பிலும்,
மத வியாபாரிகளின்
விளம்பரங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கி,
மானிட நேசிப்பை
சிதைத்தவர்களே,
உடைந்து போன உறவு
மடிந்து போகும் முன்பே
ஒட்டி எடுப்போம் வாருங்கள்.
அறுந்து போன அன்பு,
இறந்து போகும் முன்னமே
முடிச்சுப் போடுவோம்
வாருங்கள்.

அதிகாரத்தில்
குந்தியிருப்பதற்காக,
நம் சந்ததியின்
தலைகளை
உருட்டி விளையாடிய
கொடுமை எதுவென்று,
அடையாளம் காணுவோம்
வாருங்கள்.

இனவாத, இயக்கவாத,
மதவாதப் பேய்கள்,
மனிதரை வருத்தி
போரை நடத்தி
சுகத்தை
அனுபவித்துக்
கொண்டிருந்தன.
அந்தக் கொடுமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல்
தொடராமல் இருக்க
ஒன்றாய் உழைப்போம்
வாருங்கள்.

கரடிகளையும்,
காட்டெருமைகளையும்,
துரத்திவிட்டு,
மறுபடி வாழ்க்கையில்
மனிதத்தை இருத்தி
மகிழ்ச்சியை தரிசிக்க,
மனித மனம்
கொண்டவருக்கு
வரவேற்பளிப்போம்
வாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## உடன் உறவுகள்

நான்
பிறந்த காலத்தில்
சிங்களவர் என்றும்
இஸ்லாமியர் என்றும்
பேதம் இருந்ததில்லை.
சீனி முகமதுவும்
சின்னத்தம்பி வைத்தியரும்
கரவாகு வட்டைக்குள்
களவட்டியில்
சூடடிக்கும் போது
எனது அம்மாவும்,
பாறுக்கின் உம்மாவும்
எங்களுக்கு
சோறு பிசைந்து
கைகளில்
அள்ளித் தந்ததை
நினைத்துப்
பார்க்கிறேன்.
மட்டக்களப்பு வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிர்க்கடை மல்லியும்,
காத்தான்குடி
நகரசபைத் தலைவர்
அகமது லெவ்வையும்,
நானும்
நண்பர்கள்தான்.

நட்புத்தான்
எங்களுக்கு நாடு.
அடிப்படையில்
எங்களுக்கு
அன்புதான் வேதம்.

இன்பத்திலும்
துன்பத்திலும்
ஒருவருக்கொருவர்
துணையாக இருந்த
தூய
பங்காளி உறவு
எங்களின் உறவு.

காகித தொழிற்சாலையில்
காவலாளியாக
கடமை புரிந்த
கலந்தர் லெப்பை
என் நண்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைச்சேனையில் உள்ள
எச்.எம். புகாரியும்,
ஏறாவூரில் உள்ள
முஸ்தபா விதானையும்,
என் நண்பர்கள்.
எங்கள் வீட்டு
விசேசங்களில்
அவர்களும்,
அவர்கள் வீட்டு
விசேசங்களில்
நாங்களுமாகக் கலந்து
எத்தனை நாள்
மகிழ்ந்திருப்போம்.

வெள்ளை மணலில்
விசக்கடி வைத்தியர்
பிள்ளையான் தம்பிக்கு
பொன்னாடை போர்த்திய
விழாவில்,
என் பாடலைப் பாராட்டி
என்னை வாழ்த்திய
அமைச்சர்
அப்துல் மஜீத்தின்
அன்பு நட்பு
இன்னும் மறையாமல்
எனக்குள் இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிமலையூற்றுப்
பாடசாலை திறப்பு
விழாவில்
அண்ணலும் நானும்
அவையேறிப் பாடியபோது,
என்னை ஆரத்தழுவி
வாழ்த்திச் சென்ற
வகாப் விதானையாரின்
அன்பு மொழி
இன்றுவரை
இழக்க முடியாதவை.

பாலமுனை பாறுக்கும்
நானும்,
பாட்டரங்கத் தாமரையில்
பாவால் மணம் பரப்பி,
விழா முடிந்து
விடை கொடுத்து
வீடு திரும்ப
எத்தனித்த போது,
என்னைப் பிரிய மனமின்றி
அக்கரைப்பற்று
பேருந்து நிலையம் வரை
என்னோடு கூட வந்து,
தன் செலவில்
தேனீர்க் கடையில்
விருந்து வைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை கொடுத்து
வழியனுப்பிய
இஸ்லாமிய சகோதரனை
எப்படி வெறுப்பேன்.

எண்பத்தி மூன்றில்
இன வெறியர்கள்
கொழும்பில்
மூட்டிய தீயில்
என் உயிர் கருகாமல்
காத்து பேணித்த
சுமதிபாலாவின்
தூய அன்பு
எனக்கு வேண்டும்.

நான்
சிங்களவர்களுக்கு
எதிரானவன் அல்ல,
இன வெறியர்களுக்கு
எதிரானவன்.
நான் இயக்கங்களுக்கு
எதிரானவன் அல்ல,
அராஜகவாதிகளுக்கு
எதிரானவன்.

அடுத்தவன் சாவுக்கு
தேதி குறித்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரத்துவம்
பேசுகின்றவர்களே,
இன்னும்
யாரைக்
கொல்லப் போகின்றீர்கள்.
இன்னும் எவருக்குள்
இனவெறியை
தூண்டப் போகின்றீர்கள்.

மானிட மாண்பு
மதிக்கப்பட்டு,
சகோதரத்துவம்
உயர்த்தப் படும்
இன்றைய நவீன
காலத்தில்.

நீங்கள் இன்னும்
சாதி வெறியை
கொல்லவில்லை.
பிரதேச வெறுப்பைப்
போக்கவில்லை.
சீதனத்தை,
றௌடிசத்தை துரத்தாமல்
தேசியத்தை சூடாக்கி
யாரைக் கொல்லப்
போகின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் இனவெறி
உலா வந்தபோதுதான்
உறவுகள்
தொலைந்து போயின.

இனவெறிக் காற்று
ஏழைக் குடிசைகளுக்குள்
காலூன்றத்
தொடங்கிய போதுதான்,
மூச்சுத் திணறி
உயிர் வாழத்
துடித்தோம்..

நாங்கள்
ஏழை மனிதர்கள்,
அகால மரணத்தை
அடியோடு வெறுப்பவர்கள்.
எங்களின் நரம்புகள்
இதுவரை சுரம் மாறிப்
பேசியதே இல்லை.
ஏன் இந்த இன வெறி,
எதற்காக மொழி வெறி,
மனிதம் மரிக்க வேண்டுமா?

ஆழ் மனதை கோபப்படுத்தி,
சமூக மரபை சலனப்படுத்தி,
மனித நேயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்படுத்துவதால்
பிரிவினை
சரிவினைத் தருமல்லவா?

இந்த மண்ணுக்குள்
எவருக்கும்
மகுடம் கிடையாது.
வசந்தங்களை சுவாசிக்க
மனங்களைத் திறவுங்கள்.
மனிதர்களை
மனிதர்களாகப் பாருங்கள்.
மதங்களுக்கு இடையில்,
மனிதர்களுக்கு இடையில்,
ஒற்றுமையை உண்டு பண்ணிய
முகலாய
அக்பரைப் போன்ற
அரசியல் தலைவர்கள்
உருவாக உதவுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணும் மானமும்.

உண்மையும்,
ஒளியும்
உலகத்தின் சொத்து.
உயிர்களுக்கெல்லாம்
இறைவன்தான் வித்து.
இந்த மண்
இறைவன்
படைத்த மண்.
இது எவருக்கும்
சொந்தமானதல்ல.
உனது பாட்டனும்
எனது பூட்டனும்
வாழ்ந்த நிலம்.

நாம்
இந்த நீரும்,
நிலமும்
தந்த உணவில்
இரத்தமும் சதையுமாய்,
உப்பிய உடலோடு
உயிர் வாழும்
மண்ணின் வாரிசுகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்
மூதாதையர் போல்,
நாமும்
இந்த மண்ணுக்குள்
அடக்கம் செய்யப்பட
வேண்டியவர்கள்.
இந்த மண்
நாம் வாழ்ந்த
மண் என்று
இரத்தத்திலும் சதையிலும்
எழுதப்பட்டிருக்கின்றது.

எந்த ஓர் இனத்தின்
அடையாளத்தையும்
இந்த நிலத்திலிருந்து
உருமாற்ற முடியாது.

நீங்கள்
பேரிறைவனுடனும்
பேச்சுவார்த்தை நடத்தலாம்
பிறப்புரிமையை
மாற்ற முடியுமா?
இயற்கையை மாற்ற
இறைவன் எப்படிச்
சம்மதிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களை
மாற்றலாம் என்று
ஆயுதங்களைத்
தூக்கியவர்கள்,
புகழோடு
வாழ்ந்ததாக
வரலாறு உண்டா?

இந்தத் தேசத்துக்குள்,
மொழி மாறிய இனங்கள்
ஒன்றாக இணைந்து
வாழ முடியாது என்றால்,
பிரதேசத்துக்குள்
பிரதேசம்,
சமத்துவம் காண
முடியாதென்றால்,
உங்கள் சாதிக்குள்ளும்
மதத்துக்குள்ளும்
நாங்கள் மனிதர்களாக
வாழ முடியாது என்றால்,
எங்களுக்குத் தலைவர்களை
நீங்கள் எப்படி
தெரிவு செய்வீர்கள்.
உங்களுக்கு எங்கள்மேல்
என்ன உரிமையுண்டு.
இலங்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை துண்டுகளாக
பிரிக்கப் போகின்றோம்.
மக்களை எப்படி
அணைத்து
ஆளப் போகின்றோம்?

இலங்கையென்ற
இத் திருநாட்டை
மனித மனம்கொண்டோர்
ஆண்டு
நடத்தியிருந்தால்,
தமிழரும்,
இஸ்லாமியரும்,
சிங்களவரும்
எப்படி எதிரியாவார்கள்.
பெரும்பான்மை
சிறுபான்மை
பேதம் எப்படி வளரும்?
நாங்கள் மட்டும்
அடிமைகளாய்
எத்தனை காலம்
துன்புற்று வாழ்வது?
முன்னம்
இருந்ததுபோல்
ஒன்றாக வாழ
வழி காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புகாமியும்
அலியாரும்தான்
எங்கள் உறவு என்பதை
மறந்து போகாமல்
இணைந்து வாழ
வழி காட்டுங்கள்.

ஒருவர் ஒருவரின்
பிறப்புரிமையை
இழந்து போக
முடியாதென்பதை
உணர்ந்து வாழ
முயலுங்கள்.

காமத்தால்
உருவான உடல்
காலத்தால் அழிந்துவிடும்,
இருக்கும் வரைக்கும்
இதுதான் நம் தேசம்.

இந்த மண்ணில்
வாழப் பிறந்தோம்.
இந்த மண்ணில்
சாகப் போகின்றோம்.
நம்
அன்றாட வாழ்க்கை
ஒருவருக்குள் ஒருவராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்னிப் பிணைக்கப்
பட்டிருக்கின்றன.
தாய் ராகத்தை இழந்து
சேய்ராகம் உயிர்வாழுமா?

இனவாதம் எப்படித்தான்
கூத்தாடினாலும்,
நம் இருதய ரேகைகளில்
இருக்கின்ற நரம்புகள்,
அன்பு என்ற சுரங்களால்
நம்மைத்
தாலாட்டிக் கொண்டே
இருக்கும்..
அது
மனிதமென்னும்
புனித மொழியை
உச்சாடனம் செய்து
ஒலி எழுப்பிக் கொண்டே
இருக்கும்.
அந்த ஒற்றுமை
கீதத்தை,
தாளம் தப்பாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்திலும்
தமிழிலும்
மொழி பெயர்த்துக்
கொண்டே இருப்போம்.

ஒருவரை ஒருவர்
நேசிக்கும்போது
சுவாசிக்கும் காற்றுத்தான்
சுதந்திரம்.
இதுதான் நம்
ஆத்மாவின் ராகம்.
நாங்கள்
அரசியல்வாதிகளல்ல.
சராசரி மனிதர்கள்.
அன்றாடம் உழைத்து
உயிர் வாழ்பவர்கள்.

எங்களின் சினேகம்,
வீதி ஓரத்திலும்,
வியாபார நிலையத்திலும்,
வேலைத் தளத்திலும்,
சுமைகளின் கனங்களை
அன்பினால் எளிதாக்கும்
மானுட பரிமாற்றத்திலும்
சஞ்சரித்துக்
கொண்டிருக்கின்றன.
இந்த எளிய ஜீவியத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களால்
இழக்க முடியவில்லை.
இந்தப்
பகைமைப் போர்
இனிமேல்
எங்களுக்குள்
வளர வேண்டாம்.
சரிநிகர் சமமாய்
சமத்துவம் காண்போம்.

நீண்ட காலப் போரால்
நிலம்
பாழடைந்துவிட்டது.
கஞ்சிக்கும்
வழியில்லாத ஏழைகளை,
பஞ்சம்
வஞ்சம் தீர்த்துக்
கொண்டிருக்கிறது.
வறுமையின் கோடுகளில்கூட
சினேகமே இனிமையாய்
இருக்கிறது.

பசிப்பவனுக்கு
உணவை
எவர் கொடுத்தாலென்ன,
விதைத்தவன் யார்
உழுதவன்யார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசம் பார்த்தா
உண்ணுகின்றோம்.
ஏழைகளுக்கேது
சாதிப் போரும்,
மதப் போரும்,
இனப் போரும்,
மொழிப் போரும்..

உணர்ச்சியை மட்டுமே
நிகழ்ச்சியாக்கி,
வெறியை விதைத்து,
பல்லினங்களின் பாசத்தை
முறிக்க முயலாதீர்கள்.

நீதியின்பால்
நேசமுள்ளவர்களே!
நீங்களும் வாருங்கள்,
நீசர்கள் மூட்டிய நெருப்புக்குள்
நீரை ஊற்றுவோம்.
அப்புகாமியும் அலியாரும்
நம் பகைவர்கள் அல்ல,
உடன் பிறப்புக்கள்,
ஒருவருக்கொருவர்
உறவைப் பகிர்ந்து
பாசத்தைப்
பலப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்லும் சொல்

ஆளை ஆள்
புரிந்து கொள்வதை
தெரிந்து கொள்ளாமல்,
உண்மையை
உணர்ந்து கொள்ளாமல்,
அன்பின்
அருகில்கூட
நெருங்கிச் செல்லாமல்,
சட்டச் சமாதிகளை
கட்டி எழுப்புவதற்காக
சண்டை பிடிக்கின்றீர்கள்.
இணக்கப்பாட்டின்
வழிகளில்
எத்தனை நாட்களுக்கு
நடந்து செல்லப்
போகின்றீர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைகளை நிர்ணயிக்க
கோடுகளைக் கீறுவதால்,
பகையை
விலக்க முடியுமா?
இரக்கத்தைப்
பரிமாற முடியுமா?
எந்த வரையறைக்குள்
இனங்களையும்
மதங்களையும்
பிரதேசங்களையும்
கொண்டு வரப்போகின்றீர்கள்.

மனம்
இருளாய் இருக்கும்போது,
விடுதலையை,
சமாதானத்தை
கொண்டு வரமுடியுமா?

இனப் பகைமையை
பேசுவதைவிட
அமைதியின் ஆற்றலைப்
பேசிப் பாருங்கள்,
உங்கள்
குருதியின் ஓட்டத்திலேயே
மாற்றம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர்களை
நினைப்பதைவிட
அன்பானவர்களை
நினைத்துப் பாருங்கள்,
இரங்கும் எண்ணங்கள்
இருதயங்களை
அலங்கரிக்கும்.

இனங்களுக்குள்
ஏற்றத் தாழ்வை
ஏற்படுத்தியவன்
எவன்
எவன் என்பதை
ஆராய்வதில் காலம்
தள்ளாது.
ஏழைகளின் ஏக்கம்
எதைச் சுற்றி இருக்கிறது
என்பதை மட்டுமே
எண்ணிப் பார்த்தால்,
அமைதியின் பாதை
மிகப்
பிரகாசமாய்த் தெரியும்.

நிரந்தர அமைதியை
நோக்கிய பாதையில்
யார் யாரை அழைத்துப்
போனால் அமைதி வரும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரையோடிப் போயிருக்கும்
வேற்றுமையை வேரோடு
பிடிங்கி எறிய
எதை எதையெல்லாம்
ஒதுக்க வேண்டுமோ,
எதை எதையெல்லாம்
விட்டுக் கொடுக்க முடியுமோ
அதையெல்லாம்
காலத்தோடு செய்ய
முன்வாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உண்மையின் கனி

இறைவன் படைத்த
உலகில்
அனைத்தும் இருக்கிறது.
நமக்கு உரியதை
நாம்
கண்டு பிடிக்காமல்
ஆளையாள் அடித்துக்
கடித்துக்கொண்டிருக்கின்றோம்..

மொழிகளைக்
கடந்தது மனிதம்.
படைகளை விடவும்
வலிமையானது அன்பு.
நாடுகளை விடவும்
உயர்வானது உண்மை.
பஞ்சபூதங்களை விடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டக் கூடியது
பொறுமை.

ஒருவரை ஒருவர்
நேசித்துப் பாருங்கள்.
ஒருவரை ஒருவர்
மதித்து நடவுங்கள்.
ஒருவரை ஒருவர்
ஏற்றுக் கொள்ளுங்கள்.
ஒருவருக்கு ஒருவர்
கொடுக்க முந்துங்கள்.

அண்ட
கோளங்களையும்
ஆட்டி
அசைக்கும் ஆற்றல்
அன்புக்குத்தான் உண்டு.

அன்பை விட
ஆயுதமும்,
அதிகாரமும்
பெரியதல்ல.

உலகத் தோற்றமுதல்
இன்று வரை,
ஆயுத அதிகாரங்கள்
அமைதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்ததாய்
சேதி இல்லையே.

ஆயுத வழியைவிட
உண்மையின் வழி
உறுதியானது.
எந்த ஒரு தற்கால
வெற்றியிலும்
உண்மை
மகிழ்ச்சியடையாது.
பட்டாசு வெடிபோல்
எல்லா வெற்றிகளும்
கால ஓட்டத்தில்
படபட என்று வெடித்து
பலமிழந்து
தோற்றுப் போகும்.

உண்மையை
உணருங்கள்.
உங்கள் மண்ணின்
வாரிசுகளை
அந்நியராய்ப்
பார்க்காதீர்கள்.
தோல்விகள்தான்
சமாதானத்தைப்
பங்கப்படுத்தி
வந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்களில் யார்
யாரைத் தோற்கடிக்கப்
போகின்றீர்கள்.

பேச்சுவார்த்தையில்கூட
ஒருவரை ஒருவர்
வீழ்த்த முனையாதீர்கள்.
மனிதனை மனிதன்
அடிமைப்படுத்த
முடியாது என்பதை
மனத்தில் இருத்துங்கள்.

குற்றங்களையும்,
தவறுகளையும்
செய்தோம் என்பதை
பெரிய மனதோடு
ஏற்றுக்கொள்ளுங்கள்.
வகுப்பு வாதத்தின்
தொகுப்புரைகளை
பேச்சு
மேசைக்கு
எடுத்து வராதீர்கள்.

நீங்கள்
கொடியவர்கள் அல்ல.
உங்களைவிட
கோபக்காரர்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியவர்களை
நீங்கள்
கருத்தரிக்கப் போகின்றீர்கள்.
விடுதலையில் பிறந்தோம்,
அடிமைகளாக எப்படி
உயிர் வாழ்வோம்.
மக்கள்
துயரங்களோடு
நீண்ட காலம்
வாழச்
சம்மதிக்கமாட்டார்கள்.
நிலம்
நீறு பூத்திருக்கின்றது.
உங்கள் எண்ணங்களை
சுத்திகரித்து,
அன்பின் நீரை
அள்ளி இறையுங்கள்,
இதயங்கள் மதாழிக்கட்டும்,
கோபம் குறையட்டும்.

பிரிவினையென்ற
சரிவினைத் தடுக்க
எதை நான்
உனக்குத்
தருவேன் என்று
அன்பைக்
கொடுக்க முந்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு
பேச்சுவார்த்தையிலும்
ஆளையாள்
வாங்குவதைவிட,
ஆளுக்கு ஆள்
நல்லதைக்
கொடுப்பது
மேல் என்று
உணர்ந்தால்,
உங்கள்
உரையாடல் மகிழ்ச்சியாக
நடைபெறும்.

வெல்லும் சொல்லையே
அள்ளி வீசுங்கள்.
உள்ளம் தழுவிய
ஒரு புன்னகை
பகையின் இருளை
விரட்டி விடுமல்லவா?
சமாதானத்தின் முதற்படி
புன்னகைதான்.

அமைதி மலர,
உலகம் உள்ளவரை
உங்கள் பேர்கள்
நிலைத்திருக்க,
தூய்மையான எண்ணத்தோடு,
ஒருவரை ஒருவர்
அன்பு செய்ய
முனையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■

## நம்பிக்கை

உனக்குள் நீதான்
ஒரு தீர்மானத்தின்
தீபத்தை
நம்பிக்கையோடு
ஏற்ற வேண்டும்..
அது
உனக்கும் பிறருக்கும்
இருளை விலக்கும்
ஒளித்தூணாக
பிரகாசிக்க வேண்டும்..

நல்ல நம்பிக்கையை,
நாளையும்
ஏற்படுத்தலாம் என்று
நினைத்தால்,
இன்றைய இருள்
உன்னையே
விழுங்கி விடும்.
நரகத்தின் வாசலுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்தவன்
மனிதனாக
திரும்புவதில்லை.

பிரகாசமான
நீண்ட
அகன்ற பாதையை
ஆரம்பித்துவைக்கும்
ஒளிச் சுடர்தான்
நம்பிக்கை.
ஒரு துளி ஒளியை
நீதான் முதலில்
ஏற்ற வேண்டும்.

எந்தப் பார்வையும்
உனது
விழிகளுக்குள் இருந்துதான்
வெளி வர வேண்டும்..

களங்கம் சுமந்த
கண்களைக் கழுவாமல்,
எதையும் உன்னால்
முழுமையாகப்
பார்க்க முடியாது.
கொதிக்கும்
வார்த்தைகளால்
உயிருள்ள உறவை
பதியவைக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வார்த்தை வாசலில்
தென்றல் விளையாடட்டும்.

இளங்குளிர் நீரால்
கண்களைக் கழுவி
பார்வையை
தெளிவுபடுத்துவதுபோல்
உண்மையைக் கண்டு
உறவைப் பலப்படுத்தி
வாழ்வின் வழியை
புதுப்பித்துக்கொள்ளுவோம்
வாருங்கள்.

வெளியில் இருந்து
வீசப்படும் எதுவும்,
உனது
நம்பிக்கையின்
அத்திவாரத்தை
அசைக்காத வண்ணம்,
நீதான்
பார்த்துக்கொள்ள வேண்டும்..

உனது
ஒவ்வொரு நகர்விலும்
பிரச்சனைக்குரிய
மிக மோசமான
இருண்ட புகை மறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்திருந்தாலும்,
உனது நம்பிக்கை ஒளி
உனது மனத்துள் இருந்தே
தோற்றம் பெறவேண்டும்.
அதற்கு நீ
பக்குவப்பட வேண்டும்.
மன இருளை
மனிதத்தால் மட்டுமே
விலக்க முடியும்.

அத்திவாரம் குழம்பாமல்
இருப்பதல்லவா
நம்பிக்கை.
அமைதியைக்
கொண்டுவருவதில்
உறுதியாய் இரு.
உன் நம்பிக்கையை
பலப்படுத்திக்கொள்.
நீ நீயாக இரு.

ஒவ்வொரு
சந்திப்பிலும்,
பரிசுத்த ஒளியை மட்டுமே
உன் விழிகள்
பார்க்க வேண்டும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே
வீசுகின்ற தூசிகள்
உன் விழியை
களங்கப்படுத்தலாம்,
அமைதி வேண்டி
உனது மனக்கண்ணை
அடிக்கடி
கழுவியே ஆகவேண்டும்.

உனது ஆளுமை
பறிபோன பின்பு
நீயும் இல்லை
உன்
நம்பிக்கையும் இல்லை.

தமிழ், சிங்கள,
இஸ்லாமிய
இனவெறிக்கும்,
மொழி வெறிக்கும்
மத வெறிக்கும்
எதையும்
விட்டுக் கொடுத்து
அடிமையாகி விடாதே.
எங்கும் எதிலும்
முதலில்
நீ
மனிதனாய் இரு.
மனிதருக்காகவும் இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■

## ஜதார்த்தம்

அன்றய
தலைவர்கள்தான்
இந்தப் போருக்கு
முதற் காரணம்.

அன்று அவர்கள்
ஒப்பந்தங்களில்
ஒத்துக்கொண்ட
வார்த்தைகளை
ஏற்க மறுத்ததும்
உண்மை தொலைந்தது.
உலகம்
ஏமாற்றப்பட்டு
இருள் சூழ்ந்தது.
மனம் மரத்தது.
இல்லாமையிலும்
இயலாமையிலும்
நோய்வாய்ப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி அரசியல்
இயக்க
பொறாமையில்
இரத்தம் சிந்தினோம்,
இன்னுயிர் ஈந்தோம்,
இத்தனைக்கும்
நாம் கொடுக்கும்
காரணம்
சுதந்திரம்,
பிறப்புரிமை.

கேட்டு பெறுவதல்ல
உரிமை.
கொடுத்து எடுப்பதல்ல
சுதந்திரம்.
உனக்குள்
இருப்பது உரிமை.
உண்மையின் கனிகள்
சுதந்திரம்..

நீங்கள்
அடுத்தவரின் உரிமையை
பறித்திருந்தால்,
மற்றவரின் சுதந்திரத்தை
பாதித்திருந்தால்,
அது எப்படி
உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும்..
களைகளை
பிடுங்க வேண்டியவன்,
விதைகளை
பிடிங்கி எறிந்தால்
எது விளையும்.?
நம்
கட்சிகளுக்குள்ளும்
இயக்கங்களுக்குள்ளும்
கழுத்தறுபட்டது எதனால்?
ஈழ இயக்கங்களின்
வரலாற்றில்
என்ன நடந்தது?

ஊத்தைகளை கழுவி
சுத்தப்படுத்த வேண்டியவன்,
தூயவர்களை
துரத்தி விட்டதால்
அழுக்குகளும்
மரணங்களும்
இழப்புகளுந்தான்
வரலாற்றை நிறைத்தது.

அறிவுப்
பலமுமில்லை,
அரசியல்
முதிர்வுமில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம
நியாயங்கள் என்று,
சகுனிகளை வைத்து
சூதாடினீர்கள்.

உங்களில்
கௌரவர் யார்?
பாண்டவர் யார்?
பரிசேயர் யார்?
சதுசேயர் யார் என்று
கண்டு பிடிக்க முடியவில்லை.
உண்மை
உட்காரும் இடத்தில்
உள்ளம்
ஊனமானவர்களை
உட்காரவைத்தீர்கள்.

சொற் பிதற்றல்காரர்களை
ஞானிகளென்றும்,
அறத்தைக்
கொலை செய்தவர்களை
அரசியல்வாதிகளாகவும்
விளம்பரம் செய்தீர்கள்.

பந்தக்கால் நட்டாலும்
பரவாயில்லை,
கொடி
சொந்தக்காலில் நிற்பதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம்..
தமிழர் நாம்
தரமற்றதாலும்,
தரம் கெட்டதாலும்,
இன்னும் இன்னும்
தாழ்த்தப்படுகின்றோம்.
மீண்டும் மீண்டும்
வீழ்த்தப்படுகின்றோம்.
நம் இல்லத்தில்
அழுகையும்,
ஆத்திரமும்,
கவலையும்,
மரணமுமே
பெருகிக் கொண்டிருக்கின்றன.
இன்றைய
இந்த
அரசியல்
நடைமுறைகளில்,
இனங்களுக்குள்
நிரந்தர சமாதானம்
ஒரு போதும்
வாசம் செய்யாது.

உண்மை
உண்மை என்று
பொய்யைப்
பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்.
கிராமத்துச் சந்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் செல்ல செல்ல,
நாற்றமெடுக்கும்
இறைச்சி மீன்களின்
பிண வாடை
மேலிட மேலிட,
மலிவான விலைக்கும்,
கிடைத்த விலைக்கும்
வியாபாரிகள்
செத்த மீன்களை
ஏலத்தில் விற்பது போல்,
காலம் செல்லச் செல்ல,
வலிமையும் பலமும்
குறையக் குறைய,
அழிவும் ஆக்கிரமிப்பும்
பெருகப் பெருக,
வறுமையும் கொடுமையும்
மேலிட மேலிட,
அன்பும்
ஐக்கியமும் சிதையச்சிதைய
சலுகையை
பெறுவதற்காகவும்,
கிடைத்ததை
எடுப்பதற்காகவுமே
பேரம் பேசுவீர்கள்.

ஞானம் உள்ளவன்,
நல்லவர்களையும்,
நல்லாலோசனைகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கி விடமாட்டான்.
என்ன விலை கொடுத்தும்
மன அமைதிக்கு
வழி தேடுவான்.
மூடனுக்கு
அது தெரியவே தெரியாது.
அழிவுகளின் பெறுமதி
கண்களுக்குத் தெரியாமலே
செருக்கினால்
அழிந்து போவான்.

நடைமுறையில்
நல்லாலோசனை
இல்லாத இனம்,
அழிந்து விடும்.

நல்லவர்களின்
ஆலோசனையை
அவமதிப்பவன்,
அவமானத்திலேயே
சரிதையை முடிப்பான்.

நோக்கம்
நல்லதாக இருந்தாலும்
நல்வழியை நாடாதவன்
திசை மாறியே செல்வான்.
தீய வழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்பவன் எவனும்
நல்ல தீர்வுகளைப்
பெற்றுத் தரமாட்டான்.

அடக்கு முறையாளன்
சுதந்திரத்தை நோக்கி
ஒரு அடிகூட
எடுத்து வைக்கமாட்டான்.

„தலைவனும்,
முதல்வனும்
ஞானமுள்ளவனாக
இருக்க வேண்டும்.
அவன்தான் நல்லாட்சி
நடத்தத் தகுதியுடையவனாக
இருப்பானென்று"
கிரேக்க ஞானி பிளேட்டோ
கூறுகின்றார்.

மகாத்மா காந்தி
ஆன்மீக அறிவின்
ஆலோசனைகளை மட்டுமல்ல,
சோவியத் நாட்டின் பேரறிஞன்
லீயோ டால்ஸ்டோய்,
இங்கிலாந்து நாட்டின்
பேரறிஞன் ஜான் றஸ்கின்,
அமெரிக்க நாட்டின் பேரறிஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்றி டேவிட் தொரோ.
போன்றோரின்
தத்துவ முத்துக்களில் இருந்தும்
அறிவுரைகளைப்பெற்று
வாழ்ந்ததனால்தான்,
அனைவரும் ஏற்றுக்கொள்ளும்
மகாத்மாவாக உயர முடிந்தது.

பாரத நாடு
காந்தியை நல்லாலோசனைக்
காரராகக் கொண்டதனால்தான்
சுதந்திரம் அடைந்தது.
காந்தியின் வழியில்
நேரு நடந்ததால்தான்
நேருவின் தலைமை
சரித்திரத்தில்
வலிமையுடையதாக
நிலைத்திருந்தது.

நேரு என்ற தலைவன்
அம்பேத்கார்
என்ற அறிஞனை
தாழ்ந்த சாதிக்காரன்
என்று பாராது
அரசியல் சட்ட
ஆலோசகராகக்
கொண்டதனால்தான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாடு
உடைபடாத நாடாக
இன்று வரை
நிலைத்து இருக்கிறது.

திசையறியா கப்பலோட்டி
கப்பலை மட்டுமல்ல
பயணிகளையும்
அழித்து விடுவான்.

வழிகாட்டி
குருடனாக இருந்தால்
அவன் மட்டுமல்ல
அவன் பின்னே செல்லுகின்ற
அத்தனைபேரும் அலைந்து,
அலைக்கழிக்கப்பட்டு
அழிவார்கள்.

ஆட்சியாளர்களாக
அனைவரும் வரலாம்,
தகுதியில்லாத தலைவனின்
பின்னே செல்வோர்
அழிவார்கள்
என்பது வரலாறு.

ஒரு இனத்தின்
வாழ்வுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி காட்டுபவன்,
சத்தியத்தின்பால்
ஞானமுள்ளவனாக
இருக்க வேண்டும்.

நீதியை
நிலை நாட்டுவதற்கு
பல்வேறுபட்ட
அனுபவ அறிவின்
துணை தேவை.

தீ வைப்பதற்கு
பலபேர் தேவையில்லை,
தீயவனின்
கை ஒன்றே
போதுமானது.

எத்தனை ஆயிரம்
அறிவாளிகளின்
உயிர்களை
இந்தப் போரின்
செருக்கினால்
இழந்து விட்டோம்.

ஆதிக்கம் தேடும்
அதிகார வெறியருக்கு
நல்ல
ஆலோசனைக்காரர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பதில்லை.
அறிவாளிகளால்
தங்கள் பதவிக்கு ஆபத்து
வந்துவிடுமோ என்ற பயத்தில்,
நல்லவர்கள் மீதே
ஆயுதம் நீட்டப்படுகிறது.
ஓர் அமைப்பின் அநீதி
ஓர் இனத்தின்
அநீதியாகிவிடும்.
ஒரு கட்சியின் அநீதி
ஒரு நாட்டின்
அநீதியாகிவிடும்.

இரக்கம் உள்ளவரின்
துன்பமும்,
இதயம் உள்ளவரின்
வருத்தமும்.
ஆதிக்கவாதிகளை
நாசமாக்கிவிடும்.

நீங்கள் உண்மையான
சமாதானத்தைத்
தேடுபவர்களாக இருந்தால்,
நீதியின்பால் தாகமுள்ள
அறிவாளிகளை தேடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## இல்லச் சுத்தம்

வழிதவறிப் போனாலும்,
மாடுகள், நாய்கள்,
பூனைகள்கூட
தங்களை அன்பு
செய்தவர்களையும்,
அவர்கள் வீடுகளையும்,
திசை அறிந்து
நேசத்தோடு
தேடி வருகின்றன.

பதவி மீது மோகம்
கொண்ட மனிதர்கள்,
தங்களை
அன்பு செய்தவர்களை,
அடைக்கலம் தந்தவர்களை,
உடன் இருந்து
உதவியவர்களை,
உதைத்து,
அடித்து,
அவமானப்படுத்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை
செய்தார்கள் என்றால்,
இவர்களை
மனித இனத்தில்
எப்படிச் சேர்ப்பது.

சொந்த வீட்டுக்குள்
பகையையும்
கொலையையும்
சேமிப்பவர்க்கு
நிம்மதி இருக்காது.
அவர்கள் குறிக்கோளில்
வெற்றியும் கிடைக்காது.
அவர்கள் மெய் என்று
சொன்ன காலங்கள்
ஒவ்வொன்றும்
பொய்யாகவே
போகும்.

ஒரு முப்பது வருடங்களை
பின்னோக்கிப் பாருங்கள்.
எதை தவறென்று சொல்லி
தண்டனை
கொடுத்தார்களோ,
அதே தவறுகளை
அவர்களே
செய்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டிய சூழலுக்குள்
காலம் அவர்களை
தள்ளியிருந்தது.

மக்களை எந்த நாளும்
இருளுக்குள்
இழுத்துச் செல்ல
முடியாது.
ஒரு மின்னல் ஒளியில்
பல உண்மைகள்
வெளிப்பட்டுவிடும்.

விடுதலையும்
சமாதானமும்
நமக்குள்தான்
இருக்கிறது.
பதவி ஆசையையும்,
பழி தீர்க்கும்
எண்ணத்தையும்
துரத்திவிட்டு,
அன்பை
பகிர முனையுங்கள்.
அதிகாரத்தையும்,
ஆணவத்தையும்
புறக்கணித்துவிட்டு,
அறிவையும்
ஞானத் தெளிவையும்
அணிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களையும்,
துயரங்களையும்
விதைப்பதை நிறுத்திவிட்டு,
சுகங்களையும்
நலன்களையும்
பயிராக்குங்கள்.

மிரட்டுவதையும்,
அடக்குவதையும்
நிறுத்திவிட்டு,
உதவுவதற்கும்,
ஊக்குவிப்பதற்குமாக
அரவணையுங்கள்.

பிடிவாதத்தையும்,
திமிர்வாதத்தையும்
அறுத்தெறிந்துவிட்டு.
உண்மையை
ஒத்துக்கொள்ளுங்கள்.

கலகத்தையும்
மரணத்தையும்
நிறுத்திவிட்டு,
காலத்தைக்
கணக்கில் எடுங்கள்.
அமைதியையும்,
நீதியையும்
கடைப்பிடியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரத்திலும்
அவசரத்திலும் தீர்ப்பிடாமல்,
தர்மத்தில்
தாகமாயிருங்கள்.

பிரிப்பதையும்,
பகைப்பதையும்,
சிதைப்பதையும்
மறந்துவிட்டு,
உயிர்ப்பதற்கும்
இணைப்பதற்குமுரிய
வழி வகைகளைத்
தேர்ந்து எடுங்கள்.

உண்மையை
ஒத்துக்கொள்ளும்போதும்,
குற்றத்தை
மன்னிக்கும்போதும்,
போரின் காயங்கள்
ஆறிப்போகுமல்லவா?

உண்மைக்கு மாறான
எதிர்க் கருத்துக்களை
நிறுத்தும்போது,
பகையும்,
கசப்புணர்வும்
மடிந்துபோகுமல்லவா.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கு முறையால்
எதையும்
சாதிக்க முடியாது.
மாற்றுக்கருத்தாளர்கள்
கொல்லப்பட
வேண்டும் என்றால்,
நீங்கள் மட்டும்
உயிர் வாழ முடியுமா?.

எத்தனை தடவைகள்
உங்கள் உள்ளம்
உங்களையே தலை குனிய
வைத்திருக்கும். ?
ஒரு நாளில்
எத்தனை தடவைகள்தான்
மனச்சாட்சியோடு
போராடி இருப்பீர்கள்.
உங்களில் யார்
தவறு செய்யாத
சர்வேசுரனாய் இருக்கின்றீர்கள்.

உண்மையான அமைதிக்கு
வித்திட வேண்டுமாய் இருந்தால்,
ஒருவர் ஒருவருக்குரிய
மதிப்பைக் கொடுக்க வேண்டும்.
மதியாதார் வாசல்
மிதியாதே என்றது
தமிழ் நீதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரை ஒருவர் மதியுங்கள்.
நீங்கள்
பறிப்பவர்களாகவும்,
நாங்கள்
பறிகொடுப்பவர்களாகவும்,
நீங்கள்
மிதிப்பவர்களாகவும்,
நாங்கள்
மிதிபடுபவர்களாகவும்
எத்தனை காலத்துக்கு
ஊமையாக வாழ முடியும்.

தன்னை
அவமானப் படுத்தியவரோடும்,
தன் உறவு முறைகளைக்
காயப்படுத்திக்
கடத்திக்
கொண்டு போனவரோடும்,
சொத்துச் சுகங்களை
சூறையாடியவரோடும்,
சொந்தங்களை
கொலை
செய்தவரோடும்,
மானமுள்ளவன்
சேரமாட்டான் அல்லவா?.

மானம் போன பின்பு
மண் எதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடம் எதற்கு.
விடுதலை எதற்கு.

யேசு சொன்னார்
„உன்னை மதியாதார்
வாசல் மண்கூட
உன் பாதத்தில்
ஒட்டிக் கொண்டிருக்கக் கூடாது
உதறிவிட்டுப் போ" என்றார்.
மற்றவரின்
மதிப்பின்
மகத்துவத்தை
உணராதவன்,
அமைதியின் வாழ்வுக்குள்
அடுத்தவரை
அழைத்துச்
செல்லமாட்டான்.
நீதி இல்லாத
அமைப்புக்குள்
நிம்மதி நிலவாது.

நீங்கள் அடுத்தவரை
மதிக்காமல்
அமைதியைக்
கொண்டு வரமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குள் இல்லாத
அமைதியை
உலக நாடுகள்
எப்படிக்
கொண்டுவர முடியும்.
உங்கள்
இனத்தை நீங்களே
மதியாதபோது
சிங்களவர் எப்படி
மதிக்க வேண்டும் என்று
நினைப்பீர்கள்.

உங்களுக்கு மகிழ்ச்சியும்
ஊருக்கெல்லாம்
நிம்மதியும் கிடைக்க,
முதலில் உங்களைச்சுற்றி
நல்லாலோசனைக்காரர்களை
வைத்துக்கொள்ளுங்கள்.
பல கட்சி,
பல இயக்க
பகைமையை
களைந்து விட்டு,
தேசியத்தின் அமைதிக்காக
ஒன்று பட்டு உழையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேற்றுமை வேண்டாம்

ஒவ்வொரு பொழுதும்
நல்லதாகத்தான்
புலருகின்றன.
படைப்பின்
ஒவ்வொரு முகப்பிலும்,
ஆண்டவனின் சக்தி
அழுத்தமாக இருக்கின்றது,
அதைக் கண்டு பிடிப்பதுதான்
மனிதப் பண்பு.

மனிதர்களாகப் பிறப்பது
பெரிதல்ல,
நல்ல மனிதர்களாக
வாழ்வதுதான்
அதிசயமானது.

ஒவ்வொரு மனிதருக்கும்
தாய் நாடு
இறைவன்தான்.
அந்த மகிழ்ச்சியான
தேசத்துக்குள் நுழைய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதருக்கும்
ஒவ்வொரு பாதை
வகுக்கப் பட்டிருந்தாலும்,
மானிட வாழ்வின் ஜீவன்
அன்புதான்.

சிங்களவர்,
இஸ்லாமியர்,
தமிழர் என்ற வேறுபாடு
நல்லவர்களுக்குள்
இருப்பதில்லை.

நல்ல மனிதர்
தம்மீது
குற்றச் செயல்களையும்,
பாவச் சுமைகளையும்
சுமத்திக்கொள்ள
விரும்புவதில்லை.

மண்ணில்
ஒவ்வொரு மனிதனும்
தன் வேர்களுக்கு
ஒரு பிடிப்பைத்
தேடியே போராடுகின்றான்.
ஆனால் சிலரோ
மானிட நேசிப்பை
புறம் தள்ளி விட்டு
தம் வாகனங்களுக்கு மட்டுமே
பாதையை சரிக்கட்டுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் சக்தியை
இழந்து விடுகின்றார்கள்.

ஒரு தொன்மையான
மொழிக் குடும்பத்தின்
பண்பாட்டுச் சக்தியை,
இளந்தமிழன்
இழந்து வருகின்றான்.

ஆயுதங்களை தூக்கி
அட்டகாசம் புரிந்த
அமைப்புக்களில்
இணைந்தவர்கள்,
சதிப்புயலில் சிக்கி
சறுக்கிய மனிதர்கள்.

மனித குல
ஒருமைப்பாட்டின்
தோல்விக்கான
பெரும் பொறுப்பை,
சிங்கள தமிழ்
தலைவர்களே
ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மானிடர்க்கு
தொல்லை கொடுத்த
எல்லைகளற்ற போரால்,
முடிவுகளற்ற கொலைகளால்,
மனிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வி
அடைந்து நிற்கிறது.

ஆயுதங்களால்
அழகிய உலகை
உருவாக்க முடியாது.

நற் பண்பு
இல்லாதவர்களோடு
நமக்கெதற்கு உறவு.

இனிமேலாகுதல்
நம் இனத்துள்
மிஞ்சியிருக்கும்
நல்ல மனிதர்களின்
பலத்தை
கட்டி வளர்க்கப்
பாடுபடுங்கள்.

புரிந்துணர்வை
கற்றுக் கொடுக்கும்
மனிதர்களை
கண்டு பிடியுங்கள்.

போருக்கு
செலவு செய்வதை
நிறுத்தி விட்டு,
நல்லவர்களை உருவாக்க
அதைப் பயன்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிப் பெறுகின்ற
எந்த ஒரு தீர்வும்
நமக்குள்தான்
வந்து சேர வேண்டும்.

ஆட்சியால்
அமைப்புகளால்
கீறிக் கிழிக்கப்பட்ட
காயங்களை,
பெறுகின்ற தீர்வினால்
ஆற்றித் தேற்ற முடியுமா?

எரித்துப்
புதைத்த உயிர்களை
மீண்டும் உயிரோடு
எழுப்பி எடுக்க முடியுமா?

இந்தப் போர்
தீயவர்களை மட்டுமல்ல
நல்லவர்களையும்
நாசமாக்கி இருக்கிறது.
இனிமேலாகுதல்
நல்லதை நாடுவோம்.
நல்லவரோடு சேருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## நெஞ்சே நினைத்துப்பார்

நாம் அனைவரும்
அமைதியையும்
மகிழ்ச்சியையும்,
தேடுகின்றோம்.
ஆனால் அதற்காக
என்ன செய்திருக்கிறோம்.

அச்சங்களை அறுத்தெறிய,
கலகங்களை நிறுத்த
யாரோடு
பேசி இருக்கின்றோம் ?

ஞானிகளையும்
நல்ல மனம்
உடையவர்களையும்
புறம் தள்ளிவிட்டு,
ஏழைகளை
அடக்கி ஆளப்
போராடியவர்களை அல்லவா
வாழ்த்தி நின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும்,
அதிகாரிகளையும்,
தலைவர்களையும்,
தளபதிகளையும்தானே
உருவாக்கி வருகின்றோம்.
அநியாயம்
செய்பவர்களுக்குத்தானே
பணியாளனாக
இருக்கின்றோம்.

கொலைகளைச்
செய்தவர்களுக்குத்தானே
புகழாரம் சூட்டுகிறோம்.

சொர்க்கத்தை
தூக்கி வரப் போவதாக
சொல்லிக் கொண்டு,
துயரங்களை அல்லவா
சுமந்து கொண்டிருந்தோம்.

கலந்துரையாடலும்
கருத்துப்பரிமாற்றமும்
யாரோடு நடைபெற்றது?

யாரோடு நாம்
சேர்ந்திருந்தோம்?
யாருடைய விடிவுக்காக
நாம் போராடினோம் ?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய தலைமையை
நாம் ஏற்று நடந்தோம்.

தலைமைப் பதவிக்காக
தமிழர்களைத்
தண்டித்தவர்கள்,
யாரை
வாழவைத்தார்கள்

அடுத்தவரின்
மதிப்பைக் கெடுப்பவன்,
உழைப்பவரின்
பலனைப் பறிப்பவன்,
போருக்கு மனிதர்களைத்
தூண்டுகிறான் அல்லவா?

உழைப்பு,
ஒரு பகுதிக்கும்,
ஊதியம்
இன்னுமொரு பகுதிக்கும்
சொந்தமென்றால்,
ஒடுக்கப்பட்டவர்களுக்கு
யார்
நீதி வழங்குவது ?

நீதியின் கனிதானே
அமைதி,
அமைதியைத் தேடும் மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்காக
குரல் கொடுக்கவேண்டும்.

யுத்தம்
யுத்தம் என்று
இரத்தம் சிந்தச்
சத்தியம் செய்த தமிழன்,
உலகத்தின் சினேகத்தை
எப்படி
தரிசிக்கப் போகின்றான்?

உண்மையை
ஊமையாக்கி
பொறாமை இருளால்
மூடிய வறுமையை
யாரைக்கொண்டு
விலக்கப் போகின்றான்.?
நரம்பில்லாத நாக்கால்
வரம்பில்லாமல்
வாக்குறுதிகளை
அள்ளிக் கொட்டுகின்றோம்,
இந்த நாக்கால்
நல்லதைப் பேசிய
நாட்கள் எத்தனை?
சொன்னதை
செய்ய வேண்டுமென்று
எண்ணிய
இதயங்கள் எத்தனை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பைத் தேடும்
இந்த மனதால்,
அன்பை
அள்ளிச் சொரிந்த இடங்கள்
ஏதேனும் உண்டா?

தன் நம்பிக்கைக்கு
பாத்திரமானவர்
ஒரு போதும்
அடுத்தவரை அழிப்பதற்கு
ஆயுதங்களைத் தேடமாட்டார்.

ஆயுதங்களை
கையிலெடுப்பவன்,
பயத்தோடு
வாழ்க்கை நடத்துகிறான்.
பயத்தோடு
வாழ்க்கை நடத்துகிறவன்
அமைதியை இழக்கிறான்.

இவன்
தன்னைப் பாதுகாப்பதற்காக
இன்னும் இன்னும்
ஆயுதங்களையே
தேடியலைகிறான்.

அன்புக்குள்ளும்,
அமைதிக்குள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்துக்குள்ளும் இவனுக்கு
வாழ்க்கை இல்லை.

மரணத்துக்கு பயந்த
மக்கள்
ஆயுதங்களுக்கு பயந்து,
உண்மைகளை
மறைத்துவிட்டு,
ஆயுதம் தூக்கிய
அராஜகவாதிகளை
ஆண்டவர்கள் என்று
கும்பிடுகிறார்கள்.

மதி கெட்ட
மனிதர்களுக்கு
வரவேற்பளித்துக்கொண்டு,
கொலைகாரருக்கு
பாதுகாப்பாய் இருந்துகொண்டு,
தன்மானம்பற்றிப் பேசினார்கள்.
இரத்த வெறியை
ஆராதித்துக்கொண்டு
மனிதத்தைப்
போதித்தார்கள்.

அழிவின் கருவிகளை
உருவாக்கிக்கொண்டு,
உயிர்களை
மதிக்கச் சொல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்கு புறம்பாக
வாழ்க்கையை
அமைத்துக்கொண்டு,
உலக அமைதிக்காக
உலாப் போகிறார்கள்.

கொடிய மனிதர்களை
உருவாக்கிக்கொண்டு,
அடிமைத் தளைகளை
அறுத்தெறிய முடியுமா?

மனிதர்களே!
மனிதர்களே!!
மனித நேயம்
தொலைந்து போன
தலைவர்களே!!!
நெருப்பின் கொதிப்பை
நினைத்துப்
பார்த்திருக்கின்றீர்களா?
உயர்ந்த மலைகளையும்
பூமியின் திடல்களையும்
உடைத்து எரித்து
சாம்பலாக்கி விழுங்கிய
இயற்கையின் பலத்தை
எப்போதாவது
தரிசித்திருக்கின்றீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றின் வெறியை
காணவில்லையா?
கடலின் தாண்டவத்தை
பார்த்ததே இல்லையா?

மனிதா!
நெஞ்சை நிமிர்த்தி
யாரை
வஞ்சம் தீர்க்கப்
புறப்பட்டாய்.
புறநானூற்றுப் புலவன்
கூறுகின்றான்,
“இறுமாப்பு அடையாதே
இயற்கையின் சினத்துக்கு
நீ ஆளாக நேரும்” என்று.

காலம்
காத்திருந்து
தீர்ப்பெழுதும்.
முப்பது வருடங்களாக
மூண்ட யுத்தம்
இரண்டு
இலட்சத்துக்கும் அதிகமான
மனித உயிர்களை
இரையாக்கித்
தின்றது.
அன்பால் சாதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதை
ஆணவத்தாலும்
ஆயுதத்தாலும்
சாதிக்க முடியுமா?

மனிதமென்பது
உங்களுக்குள்
உறைந்து இருக்கின்றது.
மனித உறவுக்கு
தேவையான
அன்பு,
உங்களிடம்
நிறையவே இருக்கிறது.
படைப்புக்கள் அனைத்தும்
உங்கள் அன்பை
எதிர்பார்த்துக்
காத்திருக்கின்றன.
இந்த உலகை
அன்பு செய்யுங்கள்.
ஒருவரை ஒருவர்
நேசித்தால் போதும்.
ஏழைகளுக்கு
வாழ்வு வரும்.
மனிதம்
விடுதலையடையும்.
அமைதி
புன்னகைக்கும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## நேற்று நாளை இன்று எங்கே ...?

நேற்றைய நினைவில்
ஐம்பது விழுக்காடு,
நாளைய கனவில்
நாற்பது விழுக்காடு,
இன்றய பொழுதில்
பத்து விழுக்காடு.
இதுவா வாழ்க்கை.
ஓர் அரிக்கன் லாம்பின்
பிரகாசம்கூட
நமக்குள் இல்லையே.

நேற்றைய நினைவால்
நம்ப மறுக்கின்றோம்.
நாளைய கனவில்
நம்மை மறக்கின்றோம்.
இன்றையப் பொழுதை
இழந்து மரிக்கின்றோம்.
இதற்காகவா
இந்தப்
பொழுது விடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகவா
மனித குலத்தில்
நாம் பிறந்தோம்.

காலம் காயங்களை
ஆற்றக் கூடியது.
தந்தையைப்போல்
நீயில்லை,
உன்னைப் போல்,
உன் மைந்தனில்லை.
நேற்றைய காலம்
இன்று இல்லை,
இன்றைய காலம்
நாளையில்லை.
விடியல் நிச்சயம்.
ஆனால்,
இறந்த காலங்களையே
சுமந்து சுமந்து,
எண்ணத்தைப்
புண்ணாக்கிக் கொண்டோமே.

பழைய காயங்களால்
இணைய முடியுமா?
பழைய சுமைகளால்
நிமிர முடியுமா?
மரித்துப் புதைத்ததைக்
கிண்டினால்
மண்டை ஓடுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகிய பிணங்களில்
நெளிகின்ற புழுக்களையுமே
அள்ளி எடுக்கலாம்..
அமைதியும்,
அன்பும்
அங்கு கிடைக்குமா?

அன்றைய ஐரோப்பாவில்
ஆளையாள் அடித்து
அழித்ததை நினைத்தால்,
என்றுமே இணைவு
ஏற்பட்டிருக்காது.
இன்றைய ஐரோப்பாவில்
வேலியே இல்லையே!
எப்படி வந்தது யூரோ?.

மறப்போம்,
மன்னிப்போம்.
காலம்
தன் வேலையைச்
செய்து கொண்டே
இருக்கும்..

ஜாதிகளும்,
மதங்களும், நிறங்களும்,
மொழிப் பொறாமைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாழுகின்ற காலம் இது.
காலத்தை நேசிப்போம்.

நேற்று நாம்
இருக்கவில்லை.
நாளை நாம்
இருக்கப் போவதுமில்லை.
இன்று மட்டுமே
நமக்கு உரியது.
மானிடர் நினைத்து
மகிழ்ந்திடும் வண்ணம்,
ஏதோ ஒரு நன்மையை
செய்து விட்டுப் போவோம்.

மக்கள் அமைதியை
விரும்புகின்றார்கள்,
அமைதி மலர
ஒருவருக்கொருவர்
விட்டுக்கொடுத்துப்
போவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## நீங்கள் யார்?

முப்பது வருடங்களாக
இரத்தம் சிந்திப்
போராடிக்கொண்டிருந்த,
நமது அரசியல்
இயக்கங்களால்
வகுக்கப்பட்ட,
வழி முறைகளும்,
நீதித் துறைகளும்
முழுமையானதா?
சமத்துவமானதா?
இல்லவே இல்லை.
வடக்கென்றும்,
கிழக்கென்றும்,
மலையகம் என்றும்,
இஸ்லாமியன் என்றும்.
சாதியோடும் பகையோடும்
சலங்கை கட்டி
தாண்டவம்
ஆடியவர்கள்தானே நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரமான
கொடிய
கொலைக்களத்தின்
வாசலில் நிற்கிறோம்
என்பதைக்கூட மறந்து,
தமிழர்களின்
கட்சிகளுக்குள்ளும்
இயக்கங்களுக்குள்ளும்,
சாதிப் போரும்,
பதவிப் போரும்,
பிரதேசப் போரும்
நடக்காமலா இருந்தது.

ஓரம் சாய்ந்து போன
ஊத்தைகளின் வண்டி
நீதியின் மலையில் மோதி
குடைசாயாமலா
இருந்தது.?

அமைதி வேண்டுமாய்
இருந்தால்
இனிமேலாகுதல்
பாவத்தை மறைக்காமல்
அறிக்கையிட்டு
பாதையை மாற்றுங்கள்.
இனங்களைக் கடந்து,
மதங்களைக் கடந்து,
சாதியைக் கடந்து,
பிரதேசங்களைக் கடந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்
இயக்கங்களைக் கடந்து
மனிதத்தை நேசியுங்கள்.

அரச பயங்கரவாதம்,
இலங்கை என்ற
சிங்கள ஆட்சிக்குள்
பல இனங்களையும்
ஒன்றிணைக்க முடியாமல்
தோல்வி கண்டதுபோல்,
தமிழீழ
இயக்கங்களின்
பயங்கரவாதம்
தனிநாடு என்ற
தமிழ் ஈழ விடுதலைக்குள்
தமிழர்களையே
ஒன்றிணைக்க முடியாமல்
தோல்வி கண்டு விட்டது.

நம் அரசியல்,
இயக்க
அமைப்புக்கள்
போன்றுதான்.
அறுபது
வருடங்களாக
நம்மை ஆண்டு வரும்
சிங்கள அரசின்
அரசியல் யாப்புக்களும்
முழுக்க முழுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியானதும்
நேர்மையானதும் அல்ல.

குறைகளில் இருந்து
எழுந்து நடந்துதான்
நிறைவை தரிசிக்கின்றோம்.
சிங்களவர்களைப்போல்,
தமிழரும், இஸ்லாமியரும்
இந்த நாட்டின்
குடிமக்கள்.
அனைவருக்கும்
சமத்துவம் வேண்டி
அரசியல் அமைப்பில்
மாற்றத்தை
நடைமுறைப்படுத்த
உழையுங்கள்.

பௌத்தர்கள் மட்டுமல்ல,
இஸ்லாமியரும்,
இந்துக்களும்,
கிறிஸ்தவரும்
பிரதமர்களாகலாம் என்பதை
சர்வதேசச் சமூகத்தின் முன்
நடைமுறைப்படுத்திக் காட்டுங்கள்.

வடக்குத் தமிழர் மட்டுமல்ல,
மன்னார்த் தமிழர்களும்,
கிழக்குத் தமிழரும்,
இஸ்லாமிய தமிழரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தமிழர்களும்
தலைவர்களாகி
முதலமைச்சர்களாகலாம்
என்பதையும்
கோடிட்டுக் காட்டுங்கள்.

இப்போதிருக்கும் மனிதர்களை
அப்படியே ஏற்றுக் கொண்டு,
அவர்களுக்குள்
இருக்கின்ற
கறைகளைக் கழுவி,
குறைகளை
நிறைவு செய்வதை நோக்கி
அடுத்தடுத்துப் பேசுங்கள்.
தமிழர்களுக்குள்ளேயே
ஒற்றுமை இல்லை என்றால்,
இஸ்லாமியருக்கு ஒரு நாடும்,
மலையகத் தமிழருக்கும்,
கிழக்குத் தமிழருக்கும்,
வடக்குத் தமிழருக்கும்,
மன்னார்த் தமிழருக்குமாக
இலங்கையை எத்தனை
துண்டுகளாக
பிரித்தெடுக்கப்
போராடுவீர்கள்.

நமக்குள்
ஆயிரம் பிரிவுகள்
நாறிக் கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நாம்
நமக்குள்
அரசியல் சமத்துவத்தை
ஏற்படுத்த வேண்டும்.

இதுவரை தமிழர்களால்
உருவாக்கப்பட்ட
புரட்சிகர
விடுதலையின்
சட்டங்களிலும்,
உயிர் இருக்கவில்லை.
இயக்கங்கள் நடத்திய
ஆயுதப் போர் வழிகளில்,
நீதியும்
உண்மையும்
இருக்கவில்லை.

இயக்க ஆயுதங்கள்
இனத்திற்க்கு உள்ளேயே
ஒற்றுமைக்கு குந்தகமாய்
இருந்து இயங்கியதை
எண்ணிப்பாருங்கள்.

உங்களிடம்
நீதிப் பகிர்வு
நிறைவாக இல்லாதபோது,
அடுத்தவனிடம் மட்டும்
அதை நூற்றுக்கு
நூறு வீதம் எதிர்பாாப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த வகையில்
நீதியானது.

முதலில்,
நம் குறைகளை
நாம்
புரிந்து கொள்ளக்கூடிய
மனப்பக்குவம்
நமக்குள் இருக்கின்றதா?

நமக்குள் நாம்
நீதியை நிலை நாட்ட,
என்ன
செய்யப் போகின்றோம் ?

கொடிய
வழிகளுக்கும்,
கொலைச்
செயல்களுக்கும்
இன்னும் எத்தனை
காரணங்களைக்
கற்பிக்கப் போகின்றோம்?

ஊனமுற்றவரின்
அடையாளங்கள்,
உயிர் துறந்தவரின்
எண்ணிக்கைகள்
நமக்கு போதாதா?
இன்னும் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளின்
இழவு வீடுகளையா
தரிசித்து
மகிழப் போகின்றோம்?

நம் சொந்த
இனத்தின் நிம்மதியை
நாமல்லவா
கொடுக்க வேண்டும்?
இன்னும்
எவ்வளவு காலத்துக்கு
இருட்டுக்குள்
இருப்பது.
புயலுக்குள் வாழ்வது.
வாருங்கள்,
ஒளியின் முகத்தையும்,
உண்மையின் நுகத்தையும்,
சுமந்து கொண்டு,
மக்களின் பாரங்களை
சமாதானச் சுமைதாங்கியில்
இறக்கிவைப்போம்.

அமைதியை
அள்ளிக் கொடுக்கும்
நல்ல மனதை
திறந்து காட்டுவோம்.

அறத்தை அணிந்து,
நீதிக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்து நிற்ப்போம்.
கொல்லப்பட்ட மனிதர்களின்
குடும்பங்களுக்கு
நீதி கிடைக்க வேண்டும்.
குற்றம் செய்தவர்
தண்டிக்கப்பட வேண்டும்.

நீதியின்
தீர்ப்புக்கு முன்னால்
நிமிர்ந்து நிற்கப் பயந்த
குற்றவாளிகள்தான்,
அமைதியின் வருகைக்கு
எதிராக இருப்பார்கள்.

நீங்கள் யார்?
நாம் யார்?
நாட்டை எல்லோருக்கும்
பொதுவானதாக்குங்கள்.
தலைவர்களை அல்ல,
மனிதர்களை
திருப்திப்படுத்துங்கள்.
அரசியல் அதிகார
பகிர்வு
பிரதேசங்களுக்கு அல்ல,
மனிதர்களுக்கு
என்பதை
செயல் மூலம்
செய்து காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிணாம வளர்ச்சி

உலகெங்கும்
பல நூறு கதிர்கள்
உதித்து விட்டன,
பல நூறு இடங்களில்
இருள் ஓடித்
தொலைந்து விட்டது..
இன்னும் ஏன்
ஏழைகளுக்கு
விடியவில்லை.

வித்தாரமும்
கிறுவும்
வீறாப்பும்
எப்போது சாவது.
விடுதலை எப்போது
கிடைப்பது.

அணுவைத் துளைக்கும்
ஆற்றல் படைத்த
அறிவின் மனிதராய்
யாரைக் கண்டோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளைக்
கட்டி
அழுவதை
நிறுத்துவோம்.
அன்பின் ஜோதியை.
அகத்தினில் ஏற்றுவோம்.

வாலிபர்களே
வெறியை விரட்டிவிட்டு
அறிவைக் கையிலெடுங்கள்.
உங்களால்தான்
இந்த வானம்
புதிப்பிக்கப்பட முடியும்.

இன்னொரு
புதிய யுகத்தை
புடமிட
புறப்படுங்கள்.

உங்கள் மனங்களுக்குள்
நடக்காத போரா
இந்த வையத்துள்
நடக்கின்றது.

கொடியதைப் பார்க்கும்
விழிகளை
பிடுங்கி எறியுங்கள்,
மாசுபடுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும் மலையும் கடலும்
எரிந்து சாம்பலாகட்டும்.
புதிய
பூவுக்கொரு
சேதியை
சொல்லியனுப்புங்கள்.

கொடிய
கொலைக்கருவிகளை
மக்கள் பார்வைக்காக
அருங்காட்சி
அகத்தில் வையுங்கள்.

வாலிபரே!
இரு இலட்சம் மானிடரை
கொல்லுவதல்ல
பரிணாம வளர்ச்சி.
சூரியப் பிரகாசத்தை சுருட்டி
உன் நெற்றியில்
பொட்டுவை
அதுதான் வளர்ச்சி.
ஏக்கங்களையும்
கவலைகளையும்
போக்கும் புதிய
மாத்திரைகளைக்
கண்டு பிடித்துக்
கொண்டு வந்து கொடு.
இன்னும் ஓர் இருதயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கத்தில்
எடுத்து வந்து பூட்டு.
கருத்துக்களை பரிமாறு.
புதிய பூமி,
புதிய வேதம்,
பதிய தேசம்,
புதிய கீதம்,
புதிய ஞானம் பிறக்கட்டும்.
யாரிடம், எதைச்
சேர்க்க வேண்டும் என்று,
தர்மத்துக்குத் தெரியும்.

இளையவரே
இந்த உலகத்தை
உங்களுடைய
அன்னை என்று எண்ணுங்கள்.
தாயின் அமைதிக்காக,
மாதாவின் மகிழ்ச்சிக்காக
அயராது உழையுங்கள்.
நல்லவர்களோடு சேருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் இந்த யுத்தம்

அறம்
அருவருக்கும்படி
நீதியை
நெருக்கடிக்குள்
நிறுத்தியது
யுத்தம்.

பசுமையான
நிலங்களை
பாழாக்கியது
யுத்தம்.

வறுமையும்,
பயமும்,
பசியும்,
பிணியும்,
கொள்ளை நோயும்,
கொடிய மரணமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி வாழ்வும்
நம் இனத்தை
ஆட்டிப் படைத்துக்
கொண்டிருக்கிறது.

தமிழர் நிலம்
நிர்மூலம்
ஆகும் வரைக்கும்
ஆயுதங்கள் போரை
நிறுத்தாமலிருந்தது.
நீதியை சதிராடியவர்கள்
யாராய் இருந்தாலும்
அவர்கள்
தர்மத்துக்கு
சத்துராதிகள் தானே.

இந்தப் போரால்,
எந்த ஓர் இனத்துக்கும்,
மனித குலத்துக்கும்
ஆரோக்கியமே
இருக்கவில்லை.

வெறும்
வித்தாரக்
கூக்குரலுக்குள்
குதூகலித்து,
குண்டுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியாகிக்
கொண்டிருந்தது
மனிதம்.

இந்த
நிலத்தை நனைத்த
குருதி,
ஏழை எளிய
மக்களின்
சதைகளில் இருந்துதான்
வழிந்து ஓடியது.

அமைப்புக்களாலும்,
அரச படைகளாலும்
இரு இலட்சத்துக்கு
மேற்பட்ட மக்கள்
எதிரிகள் என்றும்,
எட்டப்பர்கள் என்றும்,
சுட்டுக்
கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.
ஆயுதம்,
அடுத்த சந்ததியை
குறிவைத்தே
அழித்து வந்தது.

உங்கள் குழந்தைகள்
அடியாட்களைப் போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை இழந்து,
முதுகு குனிந்து,
முண்டமாக்கப்பட்டது
உங்கள்
கண்களுக்குத்
தெரியவில்லையா?

சாதனை
படைக்க வேண்டிய
நம் சமுதாய
முனைப்புக்களை
சாவுக்குக்
கையளித்ததும்,
சண்டியர்களை அனுப்பி
முன்னேற விடாமல்
முட்டுக்கட்டை போட்டதும்
ஏன் என்று
எண்ணிப் பார்த்தீர்களா?

யார் யாரையோ
தலைவர்களாக
தூக்கிச் சுமப்பதற்காகவா
இந்த மண் உங்களை
கருத்தரித்தது.

நமது தேசம்
நமது தேசம் என்று
குடலுருவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளநரிகள் கத்தினாலும்,
அது தன் சுயநலத்தை
மறந்ததுண்டா?

அதிகாரம்
கை மாறினாலும்
அடிப்படைப் பிரச்சனைகள்
அப்படியேதான் இருக்கிறது.

இரத்தம் சொட்டச் சொட்ட
வீழ்ந்து கிடக்கும்
தமிழினத்தை
காப்பாற்ற யாருமற்றுப்
போனது.

தலைவர்களைச்
சுமந்துவரும்
கழுதைகளாக
நமது பிரதிநிதிகள்.

இன்று போல் நாளையும்
இறக்குமதி செய்யப்பட்ட
அதிகாரிகளைத்தானா
தூக்கி வரப்போகின்றீர்கள்?

இனிமேலாகுதல்
எதிர்கால
நோக்கின்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுமாந்து நடக்காதீர்கள்.
உங்கள்
சொந்த முகவரியை
உரிந்து
கொடுத்து விடாதீர்கள்.

எங்குபோனது
எமது தேசம்.
எலும்புகளுக்கு
மாலைகள் போட்டார்கள்.
ஊத்தைகளுக்கு
அழைப்பிதழ் கொடுத்தார்கள்.
நாறிய பிணங்களின்
எண்ணிக்கையை மட்டுமே
நமது முதியோருக்கு
காணிக்கையாக்கினார்கள்.

பழைய
அரசியல்வாதிகளை
குறை கூறி,
குறை கூறி.
சுதந்திரம் என்ற பேரில்,
எம்மை அடக்கி
வெறியையே
விதைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகளைத்தவிர
வேறு எதை உற்பத்தி
செய்தார்கள்.

ஒரு தடுமல் இருமலை
தடுப்பதற்கு
எதைக் கண்டு
பிடித்தார்கள்.

நாளை என்ற
ஒன்று இருப்பதை
இவர்கள்
நினைத்துப் பார்த்ததில்லை.
நாடு என்றால்
என்னவென்று
இவர்களுக்கு
தெளிவும் இருக்கவில்லை.
தமிழனின் எதிர்காலம்
வேரறுக்கப்பட்டு
வீழ்ந்து கிடக்கின்றது.
நாளையச் சமுதாயத்தின்
நரம்பிலே உரம் போட,
எதை மிச்சம்
வைத்தார்கள்.

நமது பண்பாட்டுக்கு
எதிராய் இருந்தது ஆயுதம்.
ஆயுதத்தால் எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டை
பாதுகாக்க முடியும்.

ஆரியர், முகமதியர்,
ஐரோப்பியர் வருகையால்
தமிழரின் நாகரீகப் பண்பாடு
சிதைக்கப்பட்டதாக,
காலங் காலமாக
கத்திக் கூச்சல் போட்டு
அரசியல் நடத்தி
ஆதாயம் தேடினார்கள்.
ஆழ்ந்து பார்த்தால்
அதில்
முழுக்க முழுக்க
உண்மை இல்லை.

வெளியாரால் ஏற்பட்ட
பாதிப்பை விட,
தமிழர்களால்
தமிழருக்கு
ஏற்படுத்தப்பட்ட
பாதிப்புத்தான்
தமிழனை தலைகுனிய
வைத்திருக்கிறது.

நம் முன்னோராகிய
சேர,சோழ,பாண்டியர்
என்ன செய்தார் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின்
ஒழுக்கத்துக்கு இழுக்கை
ஏற்படுத்தினவர் யார் ?
போரை தொடர்ச்சியாக
நடத்திய இனம்
எந்த இனம்.?
அன்று முதல் இன்றுவரை
பேசுவது ஒன்றாகவும்
செய்வது வேறு
ஒன்றாகவுந்தானே இருக்கிறது.

தங்களுக்குள்
ஊத்தைகளை
வைத்துக் கொண்டு,
உலகத்தைப் பார்த்து
துப்புகிறான் தமிழன்.

சாதியின் மேலும்
மதத்தின் மேலும்
பிரதேசத்தின் மேலும்
தடுக்கி விழுகின்றான்
தமிழன்.

ஒருவர் ஒருவரை
துரத்தும் வரை
ஓயமாட்டேன் என்கின்றான்
தமிழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கடல் போல்
உருவான
பெரும் படையையும்
அடையாளம் தெரியாமல்
உருமாற்றக் கூடியது
காலம்.

போரைப் பேசியே
அரசியல்
இயக்க வியாபாரம்
நடத்தியவர்கள்,
இனிமேல் மக்களிடம்
போரை வியாபாரம்
செய்ய முடியாது.

மக்கள் பகைவர்களை
அடையாளம்
கண்டு விட்டார்கள்.
அவர்களுக்கு
குறித்த கெடு
முடிவடைந்து விட்டது.
அவர்கள் இனி
அமைதியைப்பற்றியே
பேச வேண்டும்.
அவர்கள் பேசினாலும்
பேசாது போனாலும்
இனத்துக்குள் ஒரு விழிப்பு
ஏற்பட்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■

## யுத்தம்

அவநம்பிக்கையின்
அழுகுரல்தான்
ஆயுதப் போர்.

மனிதத்தை மறுப்பவனும்,
மனித உயிர்களைப்
பறிப்பவனும்தான்
ஆயுதங்களைக்
கையில் எடுக்கின்றான்.

ஆயுதங்களைத்
தூக்கியவர்கள்
எப்படித்தான்
விடுதலை விடுதலை
என்று
முழக்கம் செய்தாலும்,
ஆயுதங்கள்
எப்போதும் விடுதலைக்கு
எதிராகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதம் தூக்கிய
ஒவ்வொரு தலைவனும்
தனக்குக் கீழ்
ஒரு பகுதியை அடக்கியே
வைத்திருந்தான்.
எந்த ஒரு முன்னேற்றத்தையும்
முன்னெடுத்துச் செல்ல
முடியாதவாறு,
அடுத்தவர்களை
அடக்கியே
வைத்திருந்தான்.

உலகம்
நாகரீக பண்பாட்டில்
முன்னேறுவதற்காக,
புதுமைகளைத்
தேடிச் செல்லுகிறது,
நீங்களோ
எங்களை அடக்கும்
ஆயுததில் பயிற்சி
எடுத்துக்
கொண்டிருக்கிறீர்கள்.

கொலைகாரர்
புதுமைகளை ஒருபோதும்
அங்கீகரிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியின் நினைப்பே
இல்லாத அமைப்புக்களால்,
மனித குலத்துக்கு
விடுதலையை
எப்படிக்
கொண்டுவர முடியும்?

ஆயுத நெருக்குதலுக்குள்
பயத்தோடு வாழும்
ஒரு பணியாளன்,
தன் பணிகளை
உண்மையான
ஈடுபாட்டோடு
எப்படிச் செய்வான்?
மனம் விரும்பி
பொருளாதார நீதிக்கு,
உண்மையோடு
எப்படி உழைப்பான்?

ஆயுத முனையில்
அடுத்தவன் சொத்துக்கள்
பறிமுதல் செய்யப்பட்டால்,
உழைக்கவும், சேர்க்கவும்
எவனுக்கு ஆசை வரும்.
உழைப்பை பறிகொடுத்த
ஒரு பகுதி மக்கள்
பொருளாதாரத்தில்
எப்படி முன்னேற முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வளமும் நெல்வளமும்
நிறைந்த நல்ல நாடு என்று,
நெற்றியில் அடித்தால்போல்
சொல்லித்திரிகிறோம்,
வளமான நாடு இருந்தும்
வறுமையினால் மரணங்கள்
வருவதற்கு காரணம் என்ன?
நிலத்திலும், நீரிலும்,
உழைத்து வாழ
முடியாதவாறு
ஆயுதம்
மக்களை அச்சுறுத்தியது.
ஆயுத வன்முறை
எந்தவொரு வெற்றியிலும்
நிலைத்திருக்காது
தோல்வியுற்றது.

பதவி ஆசை
பரவும் இடத்தில்
போரைத்தவிர
வேறு எதுவுமே
வளராது.

ஆயுதம் ஆட்சி செய்யும்
பகுதிகளில்,
அன்பு சிறையில்தான்
இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி பேச
முடியாத நிலத்தில்,
குயில் எப்படிக் கூவும்.?
விடுதலை எப்படிக் கனியும்?.
அமைதியின் புன்னகையை
எவரால் அனுபவிக்க முடியும்?

சமூக நீதி
இல்லாத மண்ணில்,
மனித உயிருக்கு
பாதுகாப்பு கிடைக்குமா?
விதவைகள்
மலிந்த நாட்டை எப்படி
மகிழ்ச்சியான நாடு என்று
சொல்லப் போகின்றீர்கள்.?

ஊனமுற்றவர்
நிறைந்து வாழும்
நாட்டையா
வலிமையான நாடு என்று
உலகுக்கு
பறையறிவிக்கப் போகின்றீர்கள்?

யுத்தத்தை
தொடங்கியவர்கள் யாரோ?
அவர்கள்தான்
யுத்தத்தை நிறுத்த வேண்டும்.
இல்லையேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிய வேண்டும்
என்பதே
விதியாகிப்போனது.

நீதி
ஒருபோதும்
இன வாதத்தால்
மலராது.

ஆயுத பலத்தாலும்
ஆள் பலத்தாலும்,
பண பலத்தாலும்
தர்மத்தை
வாங்க முடியுமா?.

தர்மத்தின்
நீதியானது,
சிங்கள, தமிழ்,
இஸ்லாமியர்களென்று
தீர்ப்பு வழங்காது,
உண்மை என்ற
தராசைக் கொண்டே
தீர்ப்பு வழங்கும்.

சமாதானத்தை
தேடுபவர்களோடு
நீங்களும் சேர்ந்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் புன்னகையை
அனுபவிப்பீர்கள்.

சமாதானம்
தோன்றினால்
ஒருவரோடு ஒருவர்
அன்பைப்
பரிமாற முடியும்.

உண்மையை
பயமின்றிப்
பேசவும்,
எழுதவும் முடியும்.

உழைத்ததை
சேர்க்க முடியும்.
சேர்த்ததை சுகமாக
அனுபவிக்க முடியும்.
சமாதானத்தை தேடுபவரோடு
கை கோர்த்துக்கொள்ளுங்கள்
நல்லதோர் தீர்வு வரட்டும்.
நாடு அமைதி பெறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■

## திரும்பிப்பார்

இனங்களுக்கிடையில்
பகைமையை வளர்த்து
அமைதியை ஆயுதம்
அகற்றி இருந்தாலும்,
இயற்கை இன்னும்
இறக்கவில்லை.

மகிழ்ச்சியின் பேராசான்
நமது மண்ணில்
இன்னும்
மறையாமல் இருக்கிறான்.

குருவிகள் பேசுகின்ற
பாசைகளைக் கேளுங்கள்.
குழந்தைகள் கொஞ்சுகின்ற
மழலைகளைக்
கேளுங்கள்.
காற்றிலே கனியும்
கீதங்களைக் கேளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியின் வித்து
எதுவெனப் புரியும்..
சமாதானத்தின் சாயல்
மனதிலே பதியும்.

பச்சை வயல்களை,
பரந்த வானத்தை,
உயர்ந்த மலைகளை,
ஓடக்கரைகளை
ஒருதரம்
உற்றுப் பாருங்கள்.
உள்ளத்தில்
அமைதி பிறக்கும்.

பால் கொடுக்கும்
பசுவின்
முகத்தையும்,
பராமரிப்பே இல்லாமல்
பாதை ஓரத்தில்
பூத்திருக்கும் மலரையும்,
பகல்போல் கொதிக்காத
நிலவையும் பாருங்கள்.
இவைகளில் எதுவும்
வெறியை
விரும்பியதும் இல்லை.
விதைத்ததும் இல்லை.
இவைகள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முடைய மகிழ்ச்சிக்காக
இன்னொருத்தனின்
உயிரை
பறித்தெடுத்ததே இல்லை.

நீங்கள்
காலூன்றி இருந்தது
நம்பிக்கையின் நங்கூரமல்ல.
அங்கே
ஒருவனின் மரணத்தில்
இன்னும் ஒருவன்
மகிழ்ச்சியடைந்தான்.

தமிழனுக்குத் தமிழனே
எதிரியாக இருந்தான்,

ஏழைகளின்
இரவைக் களங்கப்படுத்தி,
மழலைகள் தூக்கத்தை
மானபங்கப்படுத்தி
இருக்கிறார்கள்.

தவறான வழிகாட்டிகளால்
அழிந்துபோன
உயிர்களை
நினைந்து
வருந்துவதைவிட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்கப்பட்ட
சந்தர்ப்பங்களையும்,
மறைந்துபோன
காலங்களையும்
அளந்து பாருங்கள்.

அனுபவித்த
துயரங்கள் போதும்.
அமைதியான
நிலப்பரப்பில்
ஆனந்தமாய் வாழ,
இயற்கையோடு
இணைந்து
இன்பமாய் வாழ
ஒருவருக்கொருவர்
விட்டுக் கொடுத்து
வாழ்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்ச்சியை தரிசியுங்கள்

உன்னுடைய விடுதலை,
உன்னுடைய அமைதி,
உன்னுடைய மகிழ்ச்சி,
இன்றே, இப்போதே
ஆரம்பிக்கப் படவேண்டும்.

எந்த மனிதர்கள் வீட்டில்
மரணம்
மகிழ்ச்சியைத்
தந்திருக்கின்றது.

அடுத்தவர்
மரணத்தை ரசிக்கின்ற
நீரோக்கள்
இன்னும்
இனத்துக்குள்
இருக்கிறார்கள்.

அடுத்தவர் மரணத்தை
சுதந்திரமாக
நடத்துவார்கள்.
ஆனால்
தம்முடைய மரணத்தை
தரிசிக்கப் பயப்படுவார்கள்.

உயிரோடு
இருப்பதுதானே
சுதந்திரம்,
இறப்பது எப்படி
சுதந்திரமாகும்.
பிறப்பதும்
இறப்பதுமல்ல சுதந்திரம்,
வாழ்வதுதான் சுதந்திரம்.

சுதந்திர மந்திரம்
சொல்கின்ற தலைவர்கள்
நிரந்தரப் புகழைத்
தேடுகின்றார்கள்.

இங்கே
தந்திரக்காரரின்
வலைகளில் சிக்கிய
ஏழைகள் பிள்ளைகள்
எரிந்து மடிகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை
தெய்வீகமானது,
அது
உயிர்ப்பை தரிசிப்பது.
அதற்கு எதற்கு
உயிர்ப் பலி.

இனப்பற்றும்
மொழிப்பற்றும்,
எல்லையைக் கடந்து,
சாதி, சமய,
கட்சி, இயக்க,
தலைமை வெறியாக,
தலைவிரித்து ஆடியது.

ஆயுதங்கள்
மரணங்களைத்தான்
கொண்டுவரும்.
அன்புதான்
உயிரையும்,
உயிர்ப்பையும்
கொண்டுவரும்.

இதுவரை
இங்கே நடத்தி
முடிக்கப்பட்ட
மரணங்கள் எல்லாம்,
கருத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்றுக்கொள்ளவும்,
எதிர்த்துரைக்கவும்,
திராணியற்ற ஆயுதங்களால்
நடாத்தி
முடிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும்
மக்கள்
மௌனமாக
மடிய வேண்டுமா?.
ஏழைகள் இன்னும்
இரும்புத்திரைக்குள்
அடக்கப்பட வேண்டுமா?
நாங்கள் இன்னும்
வாய் மூடிகளாகவே
வாழவேண்டுமா?
மறுபடி மனிதம்
மரணிக்க வேண்டுமா?
வேண்டாம் பகையுணர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாலிபரே

மகிழ்ச்சி என்பது,
கொடுப்பதில்
கிடைப்பதல்ல,
கொடுத்ததின் பின்
உங்கள்
உள்ளத்தில் ஏற்படும்
உணர்ச்சிதான் மகிழ்ச்சி.

நீங்கள்
அகால மரணத்தில்
இறக்கக் கூடாது,
இயற்கை உங்களை
அணைக்கும் வரைக்கும்
உயிரோடு
இருக்க வேண்டும்.

இன்ப துன்பங்களின்
இயல்பு நிலைகளை
நீங்களும்
அனுபவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழையின் முகத்தையும்,
இயற்கையின்
முகத்தையும்
பார்க்க வேண்டும்,
அதற்காக
உங்கள் முகங்கள்
எப்போதும்
இளம் கதிராக,
பிரகாசிக்க வேண்டும்.

மக்களுக்காக
நீங்கள்
தீயிலே விழுந்து
மடியக்கக் கூடாது,
மக்களுக்காக நீங்கள்
உழைக்க வேண்டும்.
உங்களுடைய அன்பு
நிறை நிலவுபோல்
எப்போதும் அன்பில்
பிரகாசித்துக் கொண்டே
இருக்க வேண்டும்..

உங்களுடைய மனம்
குழந்தை போல்
பசுமையாக
செழிப்பாக
இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய பார்வை
எந்த நேரமும்
தென்றலைப்போல்
மகிழ்ச்சியைத்
தந்து கொண்டே
இருக்க வேண்டும்.
உங்கள் வாழ்வு
அடுத்தவரை அழிக்காமல்
அன்பு
செய்வதாயிருக்கட்டும





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## ஊமைகளின் மௌனம்

மானிடம்
மகிழ்ச்சியை
எதிர்பார்க்கின்றது.

மண்ணில் உள்ள
ஊர்வனவற்றையும்,
நடப்பனவற்றையும்,
பறப்பனவற்றையும்,
இருப்பனவற்றையும்,
ஆழ்ந்து பார்.
ஆனந்தமாக இல்லையா?

இந்த மகிழ்ச்சி
உனக்குள் இருக்கின்றது.
உன் வீட்டில் இருக்கின்றது.
உன் சமூகத்தில்,
உன் நாட்டில்,
உலகத்தில் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் போர்
உன் மகிழ்ச்சியைப்
பறித்துவிட்டது.
உன் ஊரவர்,
உறவினர் உயிர்களையும்,
உடமைகளையும்
பறித்து சிதைத்துவிட்டது.

மக்களைப்
பலவீனப்படுத்தி
அகதிகளாய்
அனாதைகளாய் ஆக்கியது.

இந்தப் போர்
மனித ஒற்றுமையை
மானபங்கப்படுத்தியது.
ஈழம் முழுவதும்
இராணுவ முகாங்களாய்
எப்போது மாறியது?

பூவைப் போல்
உன் மனம்
சிரிக்க வேண்டும்.

மயிலைப் போல்
உன் எண்ணங்கள்
நடனமாட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளைப் போல்
உன் உறவுகள்
சிறகு விரிக்க வேண்டும்.
இதுதானே
இன்ப வாழ்க்கை.

சிரிக்கத்
தெரியாதவர்களோடு
சேர்ந்து திரியாதே.

மகிழ்ச்சியை
பகிர முடியாதவர்களோடு
குடியிருக்காதே.

உன் தோள்மீது ஏறி
உன்னையே அழுத்தி
அதிகாரம் செலுத்திய
அடக்கு முறைக்குள்,
இதுவரை எப்படி
உயிர் வாழ்ந்தாய்
என்பதை எண்ணிப்பார்.

ஆயுதம்
மரணத்துக்கல்லவா
மக்களை
அழைத்துப்
போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உறவுகளை
பலியாக்கி
அவர்கள்
பலம் பெறுகிறார்கள்.

இன்னொரு யுத்தம்
எமக்குள்
வர வேண்டாம்.

அறிவுசால்
உணர்ச்சியை
அணிந்து கொள்வோம்.

இன்றே இப்போதே
உனது மௌனம்
கலைய வேண்டும்.
மனித குலம்
அமைதி காண
புதுப் படைப்பாய்
நீ பிறக்க வேண்டும்.

உன்னுடைய ஆதரவுதான்
ஆயுத
இயந்திரங்களை
உற்சாகப்படுத்தியது.

உன்னுடைய
ஒத்துழைப்புத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாய மரணங்களை
துணிகரமாய்ச் செய்வதற்கு
துணைபோனது.

இன்றே இப்போதே
உன்
ஆதரவை
அமைதி விரும்பிகளுக்கு
கொடுத்துவிடு.

உலகம் அமைதிகாண
உன்னுடைய
ஒத்துழைப்பை
நீதிக்கான அமைப்புக்கு
தயக்கமின்றிக் கொடுத்துவிடு.

மனிதர்களை நேசிக்கும்
கருணை உள்ளத்தை
வளப்படுத்து.
நன்நீருள்ள இடத்தில்
மனத்தை பதியமிடு.

எல்லோருக்கும்
மகிழ்ச்சியையும்
செழிப்பையும்
வாரி வாரி வழங்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு மட்டுமல்ல
உன்னைப்
பெற்றவர்களுக்கும்,
உன்னோடு
பிறந்தவர்களுக்கும்
உலகத்திலுள்ள
அனைவருக்கும்
அமைதி வாழ்வு
பெருமையைத்தரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## உலகத் தீமையை தூக்காதே

இந்த உலகம்
உனக்கானது.
ஒவ்வொரு பொழுதும்,
ஒவ்வொரு மலரும்
உனக்காகத்தான்
மலருகின்றது.
ஆனால் நீயோ
ஒவ்வொரு நாளும்
துக்கத்தை அல்லவா
கக்கத்தில்
இடுக்கிக்கொண்டு
கண் விழிக்கின்றாய்.

இறைவன் உன்னை
சுதந்திரமாகப்
படைத்திருக்கிறான்.
உன் தோளில்
சுமைகள் இல்லை,
அது இன்னொருவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தோளில்
ஏற்றப்பட்டது.
இயற்கையின் முகத்தை
தரிசிக்க விடாமல்
ஆயுதம் உன்னை
அழுத்தி இருந்தது.

நீ உயிர் வாழப்
போதுமான
மூலப் பொருட்களை
இந்த இயற்கை
வைத்திருக்கின்றது.
ஆனால்
பதவி வெறியர்களல்லவா
உனக்குரிய சோற்றுக்கு
விலை
மதிக்கிறார்கள்.

ஆகாயத் தாமரையை
அண்ணாந்து பார்க்கவும்
துணிவற்று நின்றாய்.
உலகத் தீமையை
உயர்த்திப் பிடித்துள்ள
கலகக்காரர்களின்
கைகளில்
சிக்குண்டிருந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பை
எத்தனை அதிகாரிகளுக்கு
பங்கு போட்டாய்?
உன் சுய சிந்தனை
மதிக்கப்பட்டதா?.
உன் குழந்தைகளின்
மழலை கீதங்களை
எப்போதாவது
மகிழ்ச்சியோடு
மேடை ஏற்றிக்
கேட்க முடிந்ததா?

அனைத்து
இடங்களிலும்
அடக்குமுறை.
பார்க்கும் இடங்களெல்லாம்
பயங்கரவாதம்.
உனக்குள்
அமைதி நிலவியதா?
இன்னும்
நீ இறந்தவனா?
உனக்குள்
மறுமலர்ச்சி
ஏன் இல்லை?

உன்னை
எப்போது
மதிப்பிடுவாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை எப்போது
புரிந்து கொள்வாய்?

உங்கள்
சொத்துக்களை
சூறையாடி
தங்கள்
சொந்தங்களை
பாதுகாத்து
பணக்காரர்களாக்கிய
ஆதிக்க வாதிகளிடம்
உண்மை
இருக்கவில்லை என்பதை
உறுதியாக நம்பி,
மரணத்தைக் கடந்து
சமாதானத்தைக்
காணுவோம் வாருங்கள்.

ஏழைகளை,
அகதிகளை
விடுதலை செய்ய
என்ன செய்யலாம்,
முகாம்களில் அடைத்து
வைக்கப்பட்ட மக்களை
எப்படிக் காப்பாற்றலாம்
என்பதை சிந்தித்து
செயல்படுவோம் வாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## ஒரு மெல்லிய புன்னகை

வாழ்வின் ஜீவன்
இயங்கிக்கொண்டே
இருக்கும்.,
அதைப்
புரிந்துகொள்ளும்
மனப்பக்குவம்
நமக்கு
இல்லை என்றால்,
நேசத்தைப் பகிராமலே
வாழ்வு
தோல்வியில் முடிவுறும்.

ஒவ்வொரு
இதயத் துடிப்பின்
மலர்விலும்,
இரத்தங்கள் அல்ல
இன்பங்கள் பரவுகின்றன.

நம் வாழ்வின்
ஒவ்வொரு நொடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசமானது.
பிரசித்தி பெற்ற
பிரபலங்களை விடவும்,
எனது எளிய வாழ்க்கை
மிகவும் மகிழ்ச்சிகரமானது.

நேசத்தை
சுமந்து செல்லும்
எனது பாதங்கள்
எதிலும்
இடறுவதில்லை.
பள்ளங்களும் திட்டிகளும்
முள்ளுகளும்கூட
தள்ளியே போகின்றன.
அமைதியையும்,
சமாதானத்தையும்,
விடுதலையையும்
நான் விரைவிலே
சந்தித்து விடுகின்றேன்.

எனது அர்ப்பணிப்பு
மிகவும்
பெறுமதி வாய்ந்தது,
ஆனால் அது
மிகவும் மலிவாக
எல்லோராலும் இலவசமாக
கொடுத்து வாங்கக்கூடியது.
அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரிடமும்
இருக்கிறது.
அந்த
உண்மையான
அன்பின் புன்னகை,
எல்லா
விதமான
விக்கினங்களையும்
விலக்கி விடுகின்றது.
கற்களாக
இருந்த கருத்துக்கள்கூட
கற்கண்டாகிவிடும்.
மனத் தெளிவை
ஏற்படுத்திவிடும்,
அந்த அழகான
அமைதியான
அன்பின்
சிரிப்பை சேகரியுங்கள்.

சிலர்
ஒருவருக்கொருவர்
புரிந்துணர்வு இல்லாததால்,
ஆளையாள் கொல்ல
வாள்களோடும்
கத்திகளோடும்
கைத்தடிகளோடும்,
கைத் துப்பாக்கிகளோடும்
அலைகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே
எங்கள்
வீட்டுப் பூனையும், நாயும்
தம் சுயத்தை இழக்காமலே
ஒன்றை ஒன்று
புரிந்து கொண்டதால்,
எங்கள் வீட்டு முற்றத்தில்,
ஒரு கிழிந்த ஓலைப் பாயில்
ஒன்றாக
மகிழ்ந்து விளையாடுகின்றன.

நீ
ஆற்றலுள்ள
மனிதனல்லவா?
உலகையும்
அதிலடங்கிய அனைத்தையும்
ஆளப் பிறந்தவன் அல்லவா?

சிங்கத்தையும்
சிறுத்தையையும்
நீதான் ஆளவேண்டும்.
ஒரு பண்ணையில்
இரண்டும்
ஒன்றாக விளையாட,
உன்னால்தான்
பழக்கவும்,
பாடம்
படிப்பிக்கவும் முடியும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உண்மையான
தூய அன்பின்
புன்னகையை
அமைதிக்காக
அர்ப்பணிக்க
உன்னால் முடியாதா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## துன்பப்படும் தூயவர்கள்

ஏழைகள் வாழும்
இல்லங்களுக்குள்
இருந்துதான்,
மனிதமெனும்
புனித கீதம்
உதயமாகின்றது.

சுத்தமான,
புத்தம் புதிய
காற்றையும்,
இயற்கை அழகின்
நளினங்களையும்,
கிராமங்களில்தான்
அனுபவிக்க முடியும்.
உண்மையின்
உயிர்த் துடிப்பை
நாடிபார்க்கும் தளம்
கிராமங்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நாட்களும்
நாழிகைகளும்
நீளுவதில்லை.
துக்கங்களும்,
கஸ்டங்களும்
மனித உணர்வுகளை
விசனப்படுத்துவதில்லை.
இல்லாமையில்கூட
ஏதோ ஒரு மகிழ்ச்சியை
இயற்கை
தந்துகொண்டே இருக்கும்..

சிதைவுறாத
இயற்கையிலிருந்து,
மானிடம்
புதுமைகளை
தரிசித்திருக்கின்றது.

அன்பை
வாழ்க்கையாக்க முடியுமென்ற
தத்துவத்தை,
கிராமத்தவர்கள்தான்
கற்றுக் கொடுத்தார்கள்.

மனிதர்களோடு
மட்டுமல்ல
மாக்களோடும்,
மரம் செடி கொடிகளோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் திறந்து பேசும்
கூட்டு வாழ்க்கை
கிராமத்து வாழ்க்கை.

உலகத்தின் உயிர்
கிராமத்தில்தான்
பயிரிடப் படுகின்றது.
இவர்கள்தான்
தெய்வத்தையும்
தேசியத்தையும்
ஒருவர் ஒருவரில்
காணும் பக்தர்கள்.

இங்குதான்
இரத்தங்கள்
வியர்வையாய்
சிந்தப்படுகின்றன.
இவர்களின்
வாழ்வின் நம்பிக்கை
ஒரு திரியில் எரியும்
ஒளியைப்போல்
ஒருவர் ஒருவருக்குள்
வாழும் தியாகத்தில்
பதியமிடப்பட்டது.

சந்திரனையும்,
சூரியனையும்
விண்மீன்களையும் விட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்
குழந்தைகள்தான்
அவர்களுக்கு
ஜீவ ஒளி.
அந்தக்
குழந்தைகளை அல்லவா
ஆயுதம் எரித்து
ஏப்பம் விட்டது.
படித்தவர்களும்,
பணம்
படைத்தவர்களும்,
தங்கள் பாதுகாப்பை
தாங்களே
தேடிக் கொண்டார்கள்.
இங்கு
ஏமாந்தவர்களெல்லாம்
ஏழை ஜனங்களல்லவா?
ஆற்றைக் கடந்து வாழ்ந்த
அழகான
அமைதியான
கிராமங்களை,
அதிகார வெறிகொண்ட
சதிகாரர்
பழிவாங்கி விட்டார்கள்.

நச்சு மரங்களை
நாட்டுப் புறமெங்கும் நட்டு,
கிராமத்தில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தை
சாகடித்து விட்டார்கள்.

ஏழைகளின்
பொருட்களைக்
கொள்ளையடித்து,
அராஜகத்தை
நிலை நாட்டியவர்கள்,
அங்கு வாழ்ந்த
உண்மைகளை
சடலங்களாக்கி விட்டார்கள்.

உழவு இயந்திரங்களில்
ஏற்றிப்போன
கிராமத்தவர் பிள்ளைகளை,
பிண மலைகளாக குவித்துப்
புதைத்த காட்சி
மறையும் முன்னமே,
இறுதியுத்த
குண்டு மழையில்
கிராமங்கள் அழிந்து
அனாதையாக
வெறிச்சோடிக்கிடக்கிறது.
இது ஆயுதவாதிகளை
ஆதரித்ததால்
ஏற்பட்ட நிலையல்லவா?
இவர்களை
ஆதரித்த மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களால்
பாதுகாக்க முடிந்ததா?
இவர்களால்
முகாம்களில் அடைத்து
அடக்கப்பட்ட மக்களை
இவர்களால்
மீட்க முடிந்ததா?.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழல்கள் அல்ல நிஜங்கள்

எமக்காக விடிந்த
எத்தனையோ பொழுதுகள்,
கண்களுக்கு எட்டாமல்
கடுந் தூரம் பறந்துவிட்டன.
எமை விட்டு ஓடிப்போன
எந்தவொரு நாட்களும்
இன்றுவரை திரும்பவில்லை.
போனது போனதுதான்.

நாம்
நாட்கள் வழங்கிய
நாழிகைக் கொடைகளை
இழந்து விட்டோம்.

அதிசயிக்கத்தக்க
அற்புதங்களை
குறிப்பு எடுக்கத்
தவறி விட்டோம்.
இச்சைகளைத்
தீர்ப்பதற்காய்
குப்பைகளைச் சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களை
நாசமாக்கி விட்டோம்.

வேகமான நீரோட்டத்தில்
ஒரு வகையான
குதிரையில்
நிர்வாணமாய்
பிரயாணம் செய்து
உருமாறி விட்டோம்.
நிஜங்களெல்லாம்
இப்போதுதான்
நிரை நிரையாய்
திரும்புகின்றன.

பக்கத்து வீட்டாரின்
பலமான சத்தங்களும்
இப்போதுதான்
செவிப்பறையில் கேட்கின்றது.
உன்னத
சக்தியுள்ள மனம்
தாரை
தம்பட்டை கொண்டு
நீ குற்றவாளி!
நீ குற்றவாளி என்று
கூக்குரலிடுகின்றது.
சத்தியம்
நம் தலையில்
சம்மட்டி கொண்டு
அடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள்தான்
திரும்பவில்லை.
நாம் விதைத்த
நன்மைகளும்
தீமைகளும்
நாளாந்தம்
திரும்புகின்றன.

நண்பர்களே!
நாட்களை
நீங்களும்
இழந்து விட்டீர்களா?
இன்றைய
பொழுது இருக்கின்றதே!
இது போதும்,
இன்றே
எழுந்திருங்கள்.
ஊத்தைகளைக் கழுவி
உலகை வாழவைப்போம்.
ஊரின் சமாதானத்துக்கும்
நாட்டின்
சமாதானத்துக்கும்
ஏழைத் தமிழரின்
இனிய வாழ்வுக்காகவும்
ஏற்ற வழிகளை
தேடிச்
செல்வோம் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## விடுதலையின் குரல்கள்

தெய்வமே!
பேரிரச்சலுடன் கூடிய,
இந்தப் பரபரப்பான
அவசர கால
சட்டத்தின் மத்தியில்,
உனது இரக்கத்தின்
மெல்லிய வார்த்தைகளை
கேட்க முடியாது,
அப்பாவி மக்கள்
தவித்துக்
கொண்டிருக்கிறார்கள்.

தெய்வமே
மீண்டும் ஒருதரம்
இந்த யுத்தம்
தொடங்கப்படுமா?
இன்னும் நம்மவர்
இடம் பெயர வேண்டுமா?
திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள்
கொல்லப்பட வேண்டுமா?
மறுபடியும்
உழைப்பையும்
உடமைகளையும்
பறிகொடுக்க வேண்டுமா?
இன்னும் நாங்கள்
அமைப்புகளுக்கும்,
ஆயுதப் படையினருக்கும்
பயந்து, பயந்து,
கூனிக் குறுகி அடிமைகளாய்
கூலிகளாய் வாழவேண்டுமா?

அடக்கு முறை
ஆயுதங்களை
தூக்கி வந்த,
ஆத்திரக்காரர்களின்
பாதங்கள் பட்டு,
சிதைந்து போன,
சின்னச்
சின்ன புல்லுகளின்
புலம்பல்களையும்,
அந்தக் கொடியவர்கள்
உணரும் வண்ணம்
அவர்கள்
கடிமனத்தை கரைத்து
இளக வைத்தருளும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிச் சிதறல்களாலும்,
அலறல்களாலும்,
அடைத்துப் போன,
அவர்கள் காதுகளை
மறுபடியும் திறந்துவிடும்..

ஏழை எளியவர்களின்
வேதனைகளைக்
கேட்கக்கூடிய
புதிய காதுகளைக்
கொடுத்தருளும்.
ஊனமுற்றவரின்
ஈன சுரங்கள்
அந்த
செவிப்பறைகளுக்குள்
நுழைய வேண்டும்..

அனாதைகளும்,
விதவைகளும்,
குழந்தைகளும்,
அந்தரித்துக் கத்துவதை
அந்தக்
காதுகள் கேட்கவேண்டும்..

மரணப்
படுக்கைகளில் துடிக்கும்
ஒவ்வொரு மனிதர்களின்
சோக ராகங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை வேகங்களை
உள்வாங்க வேண்டும்.

அடுத்தவர் பேசும்
வார்த்தைகளின்
நியாயங்கள்
புரியக்கூடிய வகையில்
மிகத் துல்லியமான
மெல்லிய
சவ்வுகளைப் பார்த்து
அவர்களுக்குப்
பொருத்தியருளும்..

அவர்களுடைய கண்கள்
இனிமேலாகுதல்
நல்லவைகளைத்
தரிசிக்கட்டும்.
பூந்தோட்டங்கள்
உள்ள பகுதிகளுக்கு
அவர்களை ஒருதரம்
அழைத்துச் சென்று வாரும்..
இயற்கையின் முகத்தை
அவர்களும்
தரிசிக்க வழிசெய்யும்..

ஆயுதங்களைத்
தூக்கி தூக்கி
விறைத்துப்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கரங்களை
இரக்கத்தின் ஊறணிக்குள்
ஒருதரம் புதைத்து எடும்.
ஈரம் வற்றிப் போன
அந்தக் கரங்களும்,
இன்பங்களை
தொட்டுத்
தூக்கி அனுபவிக்கட்டும்.

நல்லவர்களை
தட்டிக் கொடுத்து
உற்சாகப் படுத்தட்டும்.
அவர்களின் நாக்குகள்
நல்லதைச் சாப்பிட்டு
உண்மைகளைப் பிரசவிக்க,
ஒரு தரம்!
ஒரே ஒருதரம்
அவர்கள்
மனங்களைக்கழுவி,
அழுக்குகளை
கக்க வைத்தருளும்..

அன்பு,
நீதி,
சமாதானம் பற்றிய
உண்மையான மனதுடன்
அவர்களும் பேச வேண்டும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தில் வாழும்
மக்களுக்கு
நம்பிகையூட்டும்
மகிழ்ச்சியான
ஒரு நற்செய்தியை
வெளிவரச் செய்தருளும்..

மந்திரிகளும்,
மகாபிரபுக்களும்,
தலைவர்களும்,
நினைப்பது போலல்லாமல்,
துயரப்படும் மக்கள்
நினைப்பது போல்
நடக்கச் செய்தருளும்..

இந்த
மண்ணில் மறுபடியும்
மனிதர்கள் உலா வர
உன்னைப்
பிராத்திக்கின்றேன்.

இறைவா!
இனங்களுக்கிடையில்
அமைதி
எப்போது வரும்.
வறண்ட என் மனம்
ஏக்கத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வேண்டிப்
பிரார்த்தித்துக்
காத்திருக்கின்றது.

தெய்வமே
அதிசீக்கரம்
அந்த வாழ்வு தரும்
வார்த்தையை
எங்கள் தேசத்து மக்கள்
கேட்கும்படி
உரத்துச் சொல்லும்..

மனித மனம்
சாந்தமடைய,
அமைதி மலரும்
ஒரு பொன்னாளை
உனது வல்லமையின்
அரியாசனத்திலிருந்து
பூக்கச் செய்யும்.
நிரந்தர சமாதானத்தை
உறுதிப்படுத்த,
ஒரு நிலையான
தீர்வைத்தாரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனிதம் விடுதலை அடையும்

நம் தேசத்தில்
நாளை ஒரு சமாதானம்
உதயமாகுமென்று
நம்புகின்றேன்.

நமது வீடுகளில்
ஆனந்தமும்
அக்களிப்பும்
மறுபடியும்
நடனமாடும்.

சிங்கள வெறியரும்
தமிழ் வெறியரும்
போக்கு வரத்துப்
பண்ணிய
பழைய
பாதைகளைத் தகர்த்து
புதிய பூந்தோட்டங்கள்
போடப்படட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எங்கள் தேசத்தில்
மனிதம் மட்டுமே
குடியமர்த்தப்படட்டும்.

ஒவ்வொரு
மனிதரின் ஆளுமையும்
தன்னிறைவுடன்
கவிதை பாடட்டும்..

ஆயுதம் தூக்கிய
அத்தனைபேரும்
சபிக்கப்பட்டவர்களாக
ஒதுக்கப்படட்டும்.
அவர்கள் பெயர்களை
உச்சரிப்பதற்கும்
மக்கள் அருவருக்கட்டும்.

கனிதரும் மரங்களை
புதிது
புதிதாக நாட்டட்டும்.

இதுவரை நடந்த
கெட்ட கனவுகளை
எல்லோரும்
மறந்துவிடட்டும்..

இனி
பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைக் கருவிகளை
தூக்கும் பிள்ளைகளை
பெற்றெடுக்கச்
சம்மதியாதிருக்கட்டும்.

புதிய கல்வியும்
புதிய நீதியும்,
புதிய கொள்கைகளுமே
தேசியமாகட்டும்,
ஆட்சியாளர்களும்,
அதிகாரப்பிரியர்களும்
தங்கள் பெயர்களுக்காக
கட்டி எழுப்பிய
கோட்டைகளும்,
இருக்கைகளும்
இடித்துத்
தரைமட்டமாகட்டும்..

இனத் துவேசத்தை
விற்றுவந்த
வியாபாரிகளின் கடைகளில்
இன்று முதல்
வியாபாரம் நடக்காமல்
கடைகளெல்லாம்
இழுத்துப் பூட்டப்படட்டும்.

ஆயுதம் தூக்கி
அட்டகாசம் புரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டை றௌடிகள்
வீட்டைவிட்டு
வெளியே வர வெட்கப்பட்டு
மூலைக்குள்
முடங்கிக் கிடக்கட்டும்.

தலைவர்களால்
ஏமாற்றப்பட்டு
இறந்த
இளைஞர்களை
எண்ணி எண்ணி
முதியவர்கள்
வடித்த கண்ணீர்
துடைக்கப்படட்டும்.

பாதாளத்தில்
இருந்து
குழந்தைகள்
பிறக்காமல்
பாதுகாக்கப்பட்ட,
அமைதித் தினத்தை
அனைவரும் பக்தியோடு
நினைவுகூரட்டும்.

நல்ல
இதயங்க்ளையும்,
நல்ல
நினைவுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல
நிகழ்ச்சிகளையுமே
மக்கள்
இனித் தரிசிக்கட்டும்..

ஒருவரை ஒருவர்
வாழ்த்திக் கொண்டும்,
ஒருவரை ஒருவர்
வழி காட்டியாக
ஏற்றுக் கொண்டும்
வாழ்க்கையை
புதிதாய் தொடங்கட்டும்.

களைப்பாக இருந்தாலோ,
கவலையாக இருந்தாலோ,
வருத்தமாக இருந்தாலோ
ஆளுக்கு ஆள்
ஆறுதல் சொல்ல
முந்திக் கொள்ளட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆயுதத்தையல்ல
## அன்பைத் தேடுங்கள்.

இளைஞர்களே!
அறத்தின் வாசலை
அவதானித்துப்பாருங்கள்.

உங்களோடு இருந்து
உறவாடி
மறைந்தவர்களையும்,
ஊனமுற்று
துயரங்களை
அனுபவிப்பவர்களையும்,
அதிகாரத்தில்
அமர்ந்திருந்த
தலைவர்களையும்,
அவர்கள் வல்லாதிக்க
கொடுங்கோன்மையையும்,
ஒருதரம்
உங்கள் இருதயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுத்தி
நிறுத்துப் பாருங்கள்.

அவர்கள்
இருதயத்தில்
இரக்கம் இருக்கவில்லை.
அன்பு இருக்கவில்லை,
வார்த்தையில்
தூய்மை இருக்கவில்லை,
பாதையில்
தெளிவும் இருக்கசில்லை.
தம்மைத்
தற்காத்துக் கொள்வதற்காக
உண்மைக்கு மாறாக
பொய் சொல்லி,
உங்களை பணயம்வைத்து
சூதாடியதை
நினைவு கூருங்கள்.

வாலிபர்களே!
நீங்கள்
வாழ்க்கையை
இழந்துவிட்டீர்கள்.
தன்னாதிக்க வாதிகள்
உங்கள் தலைவிதியை
தங்கள் கைகளில்
எடுத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை
வாழவைத்தார்கள்.

இறுமாப்புக்காரர்களை நம்பி
ஏமாந்துபோன
இளைய சமூதாயமே!
மூச்சு வாங்கக்
கிடைத்திருக்கும்
கடைசி ஓட்டைகளையும்
அடைக்கச் சம்மதியாதீர்கள்.

இன்னும் நமக்கு
வாழ்க்கையுண்டு என்பதில்
நம்பிக்கை வையுங்கள்.
ஒரு கரம் நம்மைத்தொடும்,
அதுவரை
மதகுகளை மூடாதீர்கள்.

நமது வாழ்வின் தொடக்கம்
ஒரு வார்த்தையில்தானே
ஆரம்பித்தது.
படிப்படியாய்
எத்தனை சொற்களை
கண்டெடுத்திருக்கின்றோம்.
அடுத்தவர்
பேசுவதைக் கேளுங்கள்.
கிடைத்ததை எல்லாம்
எடுத்துக் கொண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமைகளை மெதுவாய்
இறக்கிக் கொண்டும்,
அடுத்ததை
எடுப்போம் என்ற
நம்பிக்கையோடு பேசுங்கள்.

அரசியலைப்
படித்திருக்கின்றீர்கள்.
கொலைக் கருவிகளை
இயக்கும் தந்திரங்களையும்
படித்திருக்கின்றீர்கள்.
கண்ட கண்ட
இடங்களிலெல்லாம்
குண்டு மழை பொழியவும்
கற்றுக் கொண்டீர்கள்.
அறிஞரை,கவிஞரை,
கலைஞரை,
அடித்து அடக்கிவைக்கவும்,
துணிவு கொண்டீர்கள்.
உலகிலுள்ள அத்தனை
சூது சூழ்ச்சிகளின்
தந்திரங்களையும்
மிக விறுவிறுப்பாகக் கற்று
வென்று வந்தீர்கள்.
ஆனால் ஒன்றைமட்டும்
ஏன் இன்னும்
படிக்காமல் இருக்கின்றீர்கள்.
மனிதத்தைப் படியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிட மகிழ்ச்சி
உங்களுக்குள்ளும்,
உங்களைச்
சுற்றியும்தான் இருக்கின்றது.
உங்கள் கண்கள்
கருணையைக் காட்டட்டும்.
உங்கள் பாதங்கள்
சமாதானத்தில் நடக்கட்டும்..
உங்கள் வார்த்தைகள்
பூக்களாய் விரியட்டும்.
உங்கள் செயல்கள்
நீதியில்
தாகமாய் இருக்கட்டும்.

மானிடம்
உங்கள் பாதத்தில்
மண்டியிட்டுக் கிடக்கின்றது.
இருதயத்தை கடுமையாக்கும்
கொடுமைக்காரர்களை
நினைவுகூராமல்
மனிதர்களை
நேசிப்போம் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## நீதிமான்களைத் தேடுங்கள்.

மன்னிக்கத்
தெரியவில்லை,
மனிதர்கள் என்று
சொல்லிக்
கொள்ளுகின்றோம்..

மனிதர்களோடு
மனம்விட்டுப் பேசத்
தெரியவில்லை,
கற்றவர்கள் என்று
நம்மை நாமே
அடையாளப்
படுத்தி வருகின்றோம்..

தீயதைச்
செய்வதை மட்டுமே
வீரமென்றுரைத்து,
நம்மை நாமே
பெருமைப்படுத்திக்
கொள்ளுகின்றோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்
நமக்குள்
நீதிமான்களை
இழந்து வருகின்றோம்..

துரோகத்தையே
துணிந்து செய்து.
மரணத்தின் வீட்டில்
குடியிருக்கிறோம்..

சமத்துவத்தை
உணர்த்தும் மனிதர்களை,
ஆயுதங்களே
சிறைப்பிடித்து
அழித்திருக்கிறது.

ஆயுதத்தின் அதிகாரம்
நமது பாரம்பரிய
பண்பாட்டுச்
சமுதாயத்தை
பாழடித்து விட்டது.

மரணத்துக்கு அஞ்சிய
மக்கள் கூட்டமோ
இன்னும்
ஊருக்கு ஊர்
நாட்டுக்கு நாடு
உயிர்வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடித் திரிகிறார்கள்..
ஆயுதங்களும்
அவர்களையே
குறிவைத்துத்
துரத்துகின்றன.

எந்தப் பெரிய
சமாதான முயற்சிகளாலும்,
இதுவரை இவர்களால்
நடத்தி முடிக்கப்பட்ட
கொலைகளை
நெறிப்படுத்த முடியாது.

மண்ணுக்குள் சிந்தப்பட்ட
மனித இரத்தத்தை
மறுபடி தோண்டி,
மறுமலர்ச்சியைக்
கொண்டுவர முடியுமா?
போனது போனதுதான்.

மக்கள்
அமைதியை,
மகிழ்ச்சியை,
நிம்மதியை எதிர்பார்க்கிறார்கள்.
உன்னதமான
உயிர்களின் பாதுகாப்பை
உறுதிப்படுத்துவதற்காக
உழைப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகிழ்ச்சி மரணிப்பதில்லை

மனிதனே
இந்த
இயற்கையின்
இயல்பைப் பார்.
மகிழ்ச்சி இன்னும்
மரணிக்கவில்லை
என்பதை
தெரிந்து கொள்வாய்.

மண்ணிலே ஊர்ந்துவரும்
மரவட்டைகளின் கால்களை
எண்ணி
வியந்திருக்கின்றாயா?

கல்லுக்குள் வாழும்
தேரையின் அமைதியை
கற்றுக்கொண்டாயா?
குடத்தடியைக் கொத்தி
வாழைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டத் தெரிந்தவனே,
அங்கு வளைந்து, நெளிந்து,
ஆத்திரத்தோடு தாண்டவமாடும்
நாக்கிளம் புழுக்களின்
உணர்வுகளை
உணர்ந்திருக்கிறாயா?

இந்த
நீருக்கடியில் வாழும்
நிறங்களைக்கூட
விளங்க முடியாமல்
நீந்திக்
கொண்டிருக்கின்றோம்..

கடலுக்குள் வாழும்
மச்சங்களுக்குகூட
இன்னும்
பேர் வைத்து முடியவில்லை.
ஆனால்
மாலையும்
கழுத்துமாக
அலைந்து திரிகின்ற
மனிதர்களைத்தான்
மாதலைவர்களாக
சந்தித்து வருகின்றோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின்
அதிசயங்களை
கண்டுபிடிப்பவரைத்தான்
உலகம்
பாராட்டி வருகின்றது.
நாமோ
ஆயுத அரசியலை
நடத்தியவர்களை
ஆண்டவர்கள் என்று
ஆராதிக்கிறோம்.

உன் வார்த்தைகளை
காற்று உள்வாங்கிய
அதிசயத்தைத்தானே
கானொலியிலும்,
வானொலியிலும்
கேட்டு வருகின்றாய்.
அலை வரிசைகளில்
பிடித்த
அந்தக் காற்றை
உன் கையால்
பிடிக்க முடிந்ததா?

இன்னும்
இந்த மண்ணில்
இனந்தெரியாத பூக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை எத்தனையோ
பூக்கின்றன.
பூக்களின் முகங்களையே
சரியாகப்
பார்க்கத் தெரியாத நீயோ!
எங்களை வெல்ல
எவருண்டு என்று
இறுமாந்து நடக்கிறாய்.

இயற்கையல்லவா
உன்னையும்
உன் வீரியத்தையும்
சூறையாடி வருகின்றது.

இயற்கையை
அழிப்பதை நிறுத்திவிடு.
மண்ணை
மாசுபடுத்துவதை
மறந்து விடு.
மண்ணை
மலடாக்கும் குண்டுகளைத்
தொலைத்து விடு.
அப்போதுதான்
மகிழ்ச்சியும் சமாதானமும்
மனிதகுலத்துக்கு
கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மயான பூமி

பாலுக்கு வழியில்லா
பாலர்களைப் பார்!
சேலைக்கு வழியில்லா
தாய்மாரைப் பார்!
மருந்துக்கு வழியில்லா
நோயாளிகளைப் பார்!
விரக்தியோடு வாழும்
உன் இன மக்களுக்காக
குரல் கொடுக்க
இந்த உலகத்தில்
யார் இருக்கின்றார்கள்.
ஒருவரோடு ஒருவர்
மனம்விட்டுப் பேசுங்கள்.
மாற்றங்களைத் தேடுங்கள்.

வறண்ட மனங்களை
மறுபடி நனைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கால்களைத்
திறவுங்கள்.

உழுது பயிரிட,
அன்பு,
நட்பு எனும்
கலப்பைகளையும்
விதைகளையும்
எடுத்துச் செல்லுங்கள்.

மூச்சுக்களை
சுகமாக்கிக்கொள்ளுங்கள்.
முழங்கும் மனதின்
பேரலைகளை,
எல்லை தாண்ட
விடாமல்,
இருக்கின்ற
இறுதி நிலத்திலாகுதல்
அமைதியாக வாழ்வோம்
வாருங்கள்.

வெடித்துச் சிதறும்
கொடுமையின் அதிர்வை
வெளியே
வராமல் தடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடிய வானம்
கக்கும் நெருப்பை
கருப்பையோடே
அழிப்போம்.
புதிய வழிகள்
சமைப்போம்.

பூமியில்
புதிய யுகத்தைப்
புரட்டிப் படிப்போம்
வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளங்கதிர்களே எழுந்து வாருங்கள்

நிலவை நாங்கள்
நேசிக்கின்றோம்.
ஆனால் சுட்டெரிக்கும்
சூரியனாகத்தான்
இருப்போம்..

இன்றைய சரிதையின்
முனைப்புச் சுடரில்
எங்களின்
முகம் மட்டுமே
தெரிய வேண்டும்.
அடுத்தவன்
எங்களுக்கு கீழ்
அடிமையாகத்தான்
இருக்க வேண்டும்..
இது இறுமாப்பின்
எதிரொலியல்லவா?
இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை ஏற்றுக்கொள்ளுமா ?
நீங்கள் இந்த
ஏகாதிபத்தியத்தை
ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா?

காலையின்
கம்பீரத்தையும்,
மாலையின்
மயக்கத்தையும்
இரவின்
அரவணைப்பையும்,
எவருமே வெறுப்பதில்லை.
காலையில் மலர்ந்து
மாலையில் உதிரும்
கருவண்டு மலருக்குள்ளும்
கம்பீரம் இருக்கும்..
இயற்கையில்
ஒவ்வொன்றுக்கும்
அதற்கென்றதோர்
பொருள் இருக்கும்..
உங்கள் வாழ்வுக்கு
பொருளிருக்கின்றதா?

திரும்பத் திரும்ப,
மறுபடி மறுபடி,
மரண இருளில்
மடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பதற்குத்தானா
வாழ்க்கை?

உயிரும், உணர்வும்,
அறிவும், திறமையும்
உங்களுக்கு இல்லையா!!!

ஓர் இனத்தின்
திருப்பு முனைகள்,
திரும்பத் திரும்ப
உதிர்ந்து,
உதிர்ந்து,
மடிந்து
கொண்டே போகின்றன.
இரவுக்கா விடியல்?
இனத்தின் இளங்கதிர்கள்,
விடியல் விடியல் என்று
இருளின் மடியிலல்லவா
படுத்துறங்கி
பாழடைந்து போயின.

இந்தத்
தங்கக் கதிர்கள்
தாயின் மடியில்
எத்தனை
எதிர்பார்ப்புக்களோடு
பிரகாசித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயவள்
தாலேலோ பாடும்போது,
இந்தக் குஞ்சுகள்
இப்படி
இசை மாறி,
திசை மாறி,
கரியாகிக்
காணாமல்
போகும் என்றா
தாலாட்டு பாடினாள்.

நாளை என்பது
நம்பிக்கைக்குரியது.
ஈன்றவளின்
எதிர்பார்ப்பு
எதுவுமே நிறைவேறாமல்,
கரியாகிப்போக
காரணம் என்ன?
எங்கே போனது
இந்த
இளங்கலையின்
இலட்சியம்?
வருடங்களுக்காகவா
வாழ்க்கை.
வருடங்கள்
வயதைத்தான்
கணக்கெடுக்கும்.
வாழ்க்கையை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களுக்கு ஏது
வயோதிபம்?
வயதை வைத்து
வாலிபத்தைக்
கணக்கிடாதே,
அறிவையும்
அனுபவத்தையும்
வலிமையும்
வைத்துக் கணக்கிடு.

நாட்களும்
நாழிகைகளும்,
மாதங்களும்,
வருடங்களும்
யாருக்காகவும்
உருளுவதில்லை.
நீதான்
அதைக் கட்டிப்பிடித்தபடி
கணக்குகளை
பார்த்துக்
கொண்டிருக்கின்றாய்.

உன் வாழ்க்கைக்கு
மரணம் கிடையாது.
நோய் கிடையாது.

உன் வாழ்க்கைதான்
இறந்துபோன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு
உயிர்ப்பை ஊட்டுகின்றது.

எதற்காகவும்,
எவருக்காகவும்,
உன்னுடைய ஆளுமையை
அடகுவைத்து விடாதே.
உன்னுடைய சரிதையை
இன்னொருவர்
எழுத முடியாது.
இன்னொருவரின்
பாதையில்
நீ ஒளி தரவும் முடியாது.

காலத்தை சிந்திக்காதே!
காலம் தன் கடமையை
செய்து கொண்டே
இருக்கும்.
நீ
உனக்குள் இருக்கும்
உதயத்தின் ஆற்றல்களை
ஒன்று திரட்டு.

தீ வைப்பதெல்லாம்
தியாக
தீபமாக முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
பொழுதுக்குள் முடிய,
ஒரு
பூவுக்குள் மடியும்
வண்டா நீ ?

அடுப்பின் நெருப்புக்கு
ஆக்கி இறக்கும்
வரைக்கும்தான் சிறப்பு.
உலகத்தின் ஒளியாய்
இருக்க வேண்டிய நீ.
நரகத்தின் நெருப்பில்
நாட்டம் கொள்ளாதே.

சட்டப் புத்தகத்தினுள்
சமாதியாகிவிட்ட
நீதியையும்
நியாயத்தையும்
மறுபடி
தட்டி எழுப்பு.

அன்பு,
கனிவு,
இரக்கம் என்ற
மனிதநேயப் பண்பை
நடைமுறைப்படுத்தும்
உயிருள்ள
ஒளித் தூண்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் நிமிர்ந்து
நிலைத்து நில்.
இல்லையேல்
இன்னொரு
மகாநதியாக
கட்டுக்களை அறுத்து
வெளியே விரைந்துவா?
உன்னுடைய
தத்துவங்களை
உலகம் படிக்கட்டும்.
புதியவராய் புறப்படு.

எவரையும் அழிக்காதே!
எவருக்காகவும் நீ
வாழ்க்கை நடத்தாதே!
அடுத்தவர்
சுயத்தைப் பறிக்காமல்,.
அவனியில் அமைதி மலர,
உனது
சுயத்தின் கரத்தை
அழுத்தமாய்
உயர்த்தி நிமிர்த்து.
இளைஞனே
நீ நீயாக வெளியே வா
உலகம் அமைதிகாணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## விடிவு இருளுக்கு முடிவு

உலகம் முழுவதும்
வெளுத்து வருகின்றது.
காடுகள் எல்லாம்
வெளிச்சமாகிவிட்டன.
முயல்களின்
பொந்துகளுக்குள்
நரிகள்
இனிமேல்
தலை நீட்ட முடியாது.

இருத்தை
அமாவாசைகளால்
மூடப் பட்ட
எங்கள்
கிராமங்களெல்லாம்,
இலக்கியங்களை
படிக்கவும்,
படைக்கவும்
தொடங்கிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கிளையின்
நிழல்களில் கூட
வாசகசாலைகள்
திறக்கப்படும்
அதிசயம் நடக்கின்றது.

இருளின் புதல்வர்களே!
ஒளியின் வெள்ளம்
உங்கள் மரணத்துக்கு
கட்டியங்
கூறுகின்றன என்பதை
மறந்து விடாதீர்கள்.

இருளே!
உனக்கு
இதயம் இருந்தால்
உயிர்களைப்
பறிப்பதில்
ஆனந்தப்படுவாயா?
காலக் கதிரவன்
உன் கை
வேலைகளுக்கெல்லாம்
முடிவு கட்டி வருகின்றான்.
தோல்வியின் விளிம்பில்
தொங்கிக்
கொண்டிருக்கின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரத்
துப்பாக்கிகளே
இனிமேல் உங்களால்
நிறம் மாற முடியாது.
இவ்வளவு காலமும்
ஏழைகள்தான்
அஞ்சினார்கள்,
இப்போது நீங்கள்
அஞ்சி நடுங்கி
ஓட வேண்டி
வந்திருக்கிறது.

இருளே
இவ்வளவு காலமும்
விடியலுக்காக
போராடுவதாய்,
வேடிக்கை காட்டிவந்தாய்.

அந்தச் சூரியன்
அழகானதா?
அசிங்கமானதா?
அந்தக் காலங்கள்
சுவையானதா?
சோகமானதா?
அந்த நேரங்கள்
இன்பமானதா?
துன்பமானதா என்ற
ஆய்வின் முடிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி
வரத்தொடங்கி விட்டன.

உன்னுடைய கீதம்
ஒருதலை ராகமென்பதை
உலகம்
அறிந்து கொண்டது.
ஓர்
ஊரின் விடியலும்,
உலகின் விடியலும்
உன் கையில் இல்லை.

சேவல் கூவியா
பொழுது புலர்ந்தது.
உதய சூரியனின்
உன்னத சுடருக்கு
கட்டியம் தேவையில்லை.

நீ என்ன
நினைக்கின்றாய் என்று
எனக்குத் தெரியும்.
வருங்காலங்களை விட
சென்ற காலங்களை
இழக்கக்கூடாதென்று
திரும்பவும்
துடிக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாகி விட்டதும்
விரயமாகி விட்டதும்
உன்னுடையதல்ல.
இதுவரை இருந்த
இருளின் இராச்சியத்தை
இன்னும் தொடரவே
எண்ணிக்
கொண்டிருக்கின்றாய்.
முடியாது
முடியாது
அதை இனிமேல் உன்னால்
இழுத்துவர
முடியவே முடியாது.

ஏழைகளின் மனங்கள்
எரியத் தொடங்கிவிட்டன.
வேர்த்த நெஞ்சங்கள்
வேதனை தாங்காது
வானத்து மின்னலையே
வராதே என்று
விரட்டும் அளவுக்கு
நெஞ்சில்
நெருப்பு மூண்டு விட்டது.

நீதியின் புதல்வர்கள்
ஆத்திரத்தோடு
வருகின்றார்கள்.
மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் அட்டகாசத்துக்கு
அடி பணிய மாட்டார்கள்.

இறுமாப்போடு
இருக்கின்ற இருளே!
எழுதிக்கொள்
இதுதான் உன்
இறுதி நூற்றாண்டு.
அடிமைகள் போல்
எமை நடத்தும்
கொடியவர்களின்
பகை முடிக்க
தர்மம்
பல உருவங்களில்
பிறப்பெடுத்திருக்கிறது.
உங்கள்
அடாவடித்தனத்தனம்
அனைத்துக்கும்
ஆண்டவன்
முடிவு கட்டி வருகிறான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## மறுபடி பிறப்பீர்களா?

இரும்புக் குண்டுகளும்
எலும்புகளும்,
எங்களுக்கு வேண்டாம்..
இளநகை ஒன்றுக்காகவே
இயற்கை
தவம் இருக்கின்றது.

மாசற்ற மனத்தை
மறுபடி எடுத்து
உடுத்துங்கள்.

வையம் உய்ய
நல்லதோர்
வார்த்தையை
நலஞ்சேரத் தாருங்கள்..

ஆகாயத் தாமரையும்,
ஆறுகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்களும்
ஆனந்தப்பட வேண்டும்,
அன்பான
வார்த்தைகளை
தேடி எடுங்கள்.

இரும்புத்
துப்பாக்கிகளுக்குள்
சிக்குண்ட
ஏழை இதயங்கள்,
மறுபடி மனிதராய்
இயங்க வேண்டும்.

இரத்தம் தோய்ந்த
எங்கள் நிலப்பரப்பை
கழுவித்
துடைக்க வேண்டும்.

மண்ணில்
மனிதக் குழந்தைகள்
மறுபடி தவழ வேண்டும்..
இன்ப நீரை
இளங்கதிர்களெல்லாம்
அள்ளிப் பருகவேண்டும்..
இரக்கத்தின் மதகுகளை
எப்போது திறப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளின் சிரிப்பை
பறித்து சுவைத்த
இரும்புத் துரைகளே,
மானிட அவதாரம்
மறுபடி எடுப்பீர்களா?
ஆலய தீபத்தையும்
ஆராதனை கீதத்தையும்
அர்ச்சனைப் பூக்களையும்
கோயில் மொழியையும்
குழந்தைகள்
பார்த்துக் கேட்டு
அறிந்து மகிழ வேண்டும்..
நிரந்தர அமைதியைக்
கொண்டுவாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## மனிதத்தை விடுதலை செய்யுங்கள்

மனிதா
உனது போரினால்
என்ன புதுமையை
செய்து முடித்தாய்.
பிறந்ததும்
பாலுக்கு போராடினாய்.
வளர்ந்ததும்
தோலுக்கு போராடினாய்.
நிமிர்ந்ததும்
பேருக்கும்,
புகழுக்கும் போராடினாய்.
நிரந்தர மகிழ்ச்சியையும்,
நிம்மதியையும்
உன்னால்
கொண்டுவர முடிந்ததா?
இதுவரை
உன்
நாக்கிலும் நரம்பிலும்
மாற்றம் ஏற்பட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிலும் நினைவிலும்
மாற்றம் ஏற்பட்டதா?
சுமையிலும் சோர்விலும்
விடுதலை கிடைத்ததா?
சூரியனும் சந்திரனும்
தோன்ற மறுத்ததா?
தொப்பிள்
கொடியில்லாமல்
பிள்ளைகள் பிறந்ததா?

என்ன புதுமையைச்
செய்வதற்காக
இத்தனை வதைகளையும்
கொலைகளையும்
செய்து கொண்டு
இருக்கிறாய்?

உன்னுடைய
கொடுமையினால்,
காயங்களையும்,
சுமைகளையும்,
ஏக்கங்களையும்,
இரத்தப் பழிகளையும்
சுமந்தபடிதான்,
இந்த
அழகான உலகம்
நொந்து வெந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து
கொண்டிருக்கின்றது.

அற்புதமானது
இந்த உலகம்.
அதிசயமானது
இந்த உலகம்..
உனது
குடும்பம்
மட்டுமா உலகம்.
உனது
இனம்
மட்டுமா உலகம்,
உன்னைச்
சுற்றித்தானே உலகம்.
ஆனால்!
நீயோ,
உன்னையும்,
உனக்கு
வேண்டியவர்களையுமே,
காண முனைகிறாய்.
நல்லவை அனைத்தையும்
நீயே
சுவீகரிக்க முனைகிறாய்.
இழப்புக்களையும்,
கசப்புக்களையும்
அடுத்தவர்களுக்கே
கொடுக்க முனைகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு நீ
பணிவிடை செய்வதைவிட,
அடுத்தவர் உனக்கு
பணிவிடை
செய்ய வேண்டும்,
அடுத்தவர் அனைவரும்
உன்
பாரங்களையெல்லாம் தூக்கி
உன்னைப்
பாராட்ட வேண்டும்
என்பதில்தானே
ஆர்வமாய் இருக்கிறாய்.
ஏதோ ஓர் இடத்தில்,
ஏதோ ஒரு வகையில்,
நீ
அதிகாரம்
செய்து கொண்டே
இருக்கிறாய்,
ஆனாலும்
உன் முகத்தின்
ரேகைகள் மட்டும்,
எதிலுமே திருப்திப்படாமல்,
அச்சத்தோடும்,
வருத்தத்தோடும்,
வாழ்வதையே
சுட்டிக் காட்டிக்
கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகத்தையும்,
மரணத்தையும்,
துயரத்தையும் ஏற்படுத்தும்
மனிதா!
இதுவரை
நீ கண்டுபிடித்தவைகளில்
பிழையில்லாமல்
நிலைத்திருப்பது
ஏதேனும் உண்டா?
அறிவில் நிறைவுள்ள
மனிதர் ஒருவரை,
இதுவரை சரிதையில்
தரிசித்திருப்பாயா?

மண்ணுக்கு ஏதடா மரணம்!
மாவீரன் அலெக்சாந்தரும்,
கைகளை விரித்தபடிதானே
கடைசியாய்ப்
பயணம் போனான்.
உனக்கும் எனக்கும்
இந்த மண்ணில் முடிவு
மரணந்தானே.

ஆள்பவன் மரணத்துக்கும்
ஆளப்படுபவன்
மரணத்துக்குமிடையில்
என்ன வித்தியாசம்.
ஒரு துடிப்போடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முக்கலோடு
ஒரு முனகலோடு,
ஓர் உந்துதலோடு
தேடிப் பிடித்த மூச்சு
ஓடிப் போகின்றது.
கட்டைக்குத்தானே
கற்பூரம் காட்டப்படுகின்றது.

மரணத்தை தரிசிப்பதற்கு முன்
மனிதர்களை தரிசிப்போமா.?
போரை நடத்துவதற்கு முன்
அழிவுகளையும்,
அவலங்களையும் சிந்திப்போமா?.

உண்மையைப்
புதைத்து விட்டு,
வெள்ளையடிக்கப்பட்ட
கற்களை
புதை குழிகளில்
நட்டுவதால்
என்ன பலன்.

மண்டை ஓடுகளையும்,
எலும்புக் கூடுகளையும்,
புதை குழிகளில் இருந்து,
வெளியில் எடுத்து
குவியுங்கள்.
ஆயிரம் ஆயிரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்து சிதைந்து
குவிந்து கிடக்கும்
ஏழைப் பிள்ளைகளின்
எலும்புத் துண்டுகள்,
இந்தப்
போரின் கொடுமைகளை
நமக்கு
எடுத்து உரைக்கட்டும்.

அழிவின் கருவிகளை
வருங்காலம்
வெறுத்து ஒதுக்க
வழிபிறக்கட்டும்..

இனிமேலும் கொடுமையை
போதிக்காதீர்கள்.
ஆயுதங்கள் வேண்டாம்.
அரக்கர்களின்
அறிவுரையும் வேண்டாம்.
நீதியற்ற கொடியவரின்
நெஞ்சுரமும் வேண்டாம்.
குழந்தையாக மறுபடியும்
நாம் பிறக்க வேண்டும்.
குவலயத்தில் தமிழ்மறைக்கு
சாட்சியாக வேண்டும்.
அமைதி என்னும் பூங்காவில்
சிரித்து வாழ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■

## சாகாத தத்துவம்

செத்துப்போன
தத்துவங்களை
சிம்மாசனம்
இருத்துவோம் என்று,
திரும்பத்திரும்ப
சத்தியம்
பண்ணிக் கொண்டிருக்கும்
சவச்சாலைகளே!

இந்த நூற்றாண்டிலேயே
எடுபடாமல்
இழுபட்டுக் கொண்டிருக்கும்
உங்களின் தத்துவங்கள்.
அடுத்த நூற்றாண்டில்
எப்படி
அரங்கேறப் போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிபர்களை,
வாலிபர்களை,
குழந்தைகளைக்
கொன்று
குவித்து விட்டீர்கள்.

வயல்களையும்,
உழவர்களையும்,
எருதுகளையும்கூட
எரித்து
சாம்பலாக்கி விட்டீர்கள்.

விசாரணைகள் இல்லாமலே
தீர்ப்புக்களை
நிறைவேற்றிய
துரைமார்களே!
வீதியில்
கருகிக்கிடந்தது
மரக்கட்டைகள் அல்ல
மனிதர்கள்.

நீங்கள்
முறித்துப் போட்ட
முதுகு எலும்புகளெல்லாம்
ஆமணக்கம் குச்சுகளல்ல.
நீங்கள் சாகவைத்தது
மனிதர்களை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைக்கு உதவாத
தத்துவங்களுக்காகப்
பல்லாயிரம் உயிர்களை
பலியாக்கி விட்டீர்கள்.

இன்னுமேன் இறுமாப்பு,
எழுந்திருங்கள்
இந்த நூற்றாண்டுக்குரிய
அத்திவாரங்களை
கட்டியெழுப்புவோம்.

உலகம் சுருங்கி விட்டது
எல்லைகள்
தகர்ந்து விட்டன,
மனிதம் மலர்ந்து
கொண்டிருக்கும்
மகத்தான வேளையிலே,
நீங்கள் மட்டுமேன்,
வில்லங்கமாக
விலங்குகளைப்
பூட்டிக் கொண்டு
அலறித் துடிக்கின்றீர்கள்.

ஆகாயப் பறவைகளை
அன்னாந்து பாருங்கள்,
அன்னையின் மடியில்
தவழும்
சின்னக் குழந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்த
முகத்தைப் பாருங்கள்.
கோபம் இருக்கிறதா?
பேதம் இருக்கின்றதா?

ஜாதிக்கொரு
கொடி வேண்டாம்.
வீதிக்கொரு
கட்சி வேண்டாம்.
மதத்துக்கொரு
கதிரை வேண்டாம்.
இனத்துக்கொரு
நாடு வேண்டாம்.
உலகை நேசியுங்கள்.
கலகம் நிறுத்தப்படும்.
சாமாதானத்தை பேசுங்கள்,
சண்டை நிறுத்தப்படும்.
ஒருவருக்கொருவர்
விட்டுக்கொடுங்கள்
நாடு
கட்டியெழுப்பப்படும்.

அன்புதான் மதம்.
அன்புதான் மொழி.
அன்புதான் இனம்.
அன்புதான் நாடு.
அன்புதான் உலகம்.
அன்புதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாத தத்துவம்.
அனைவரின் சுயத்தையும்
மதியுங்கள்.
அன்பை
பகிருவோம் வாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■

## யாரிடம் செல்வோம்
## யாரோடு சேர்வோம்

நம் தாயகத்தில்
நமது மக்கள்
அச்சத்தோடும்,
நடுக்கத்தோடும்,
அழுது கொண்டு
அமைதியற்று
அல்லல்படுவது முறையா?

இயக்கங்களாலும்,
இராணுவத்தாலும்
மரணதண்டனை
விதிக்கப்பட்ட
ஆயுள் கைதிகள்தானா
நமது மக்கள்?

கொலைகாரர்
கொலைத் தண்டனையை
நிறைவேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைக் கருவிகளுடன்
எந்த வீட்டுக்குள்ளும்
எந்த நேரத்திலும்
வந்து போகலாம்
என்ற பயத்தில்,
மக்கள்
நடுங்கிக்
கொண்டிருக்கிறார்கள்.

சொந்த வீட்டுக்குள்ளும்
சுயமாய்
இயங்க முடியாத அளவுக்கு,
மக்கள்
மன நோயினால்
தாக்குண்டு
இருக்கிறார்கள்.

போருக்குள் நாடா?
நாட்டுக்குள் போரா?
இந்த ஆயுத
நெருப்பின்
நெருக்குதலுக்குள்
கருகிக்கொண்டிருந்த
அப்பாவி மக்களின்
சுமைகளை
நாம்
சுமந்து பார்த்தோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் ஆத்மா
ஒவ்வொரு நிமிடமும்
ஆவலோடு
எதிர்பார்த்திருந்தது
போரின் முடிவை.

ஆயுதங்கள்
மரிக்க வேண்டும்,
அமைதி
பிறக்க வேண்டும்
என்பதுதான்
அவர்கள்
மனதில் உள்ள
ஒரே ஆசை.

மரணத்தின் பிடியில்
சிக்கியிருந்த
மனித உயிர்களை
பாதுகாப்பதற்காக,
நாம்
என்ன செய்தோம்.

மானிட சமாதானத்துக்காக
மனித குல ஒற்றுமைக்காக
நாம் யாரோடு
பந்தி அமர்ந்தோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்மண் முழுவதும்
வெடி குண்டுப்
புகையால்
இருண்டு கிடந்தது.

துன்பத்தின் மத்தியில்
துடித்த
அந்த மக்களின்
கரங்களைத்
தொட்டுத் தூக்கி,
ஆறுதலின்
பாதையைக் காட்ட
நீயும் ஒருவனாய்
இருந்தாயா?

இப்போதே நீயும்
இரக்கத்தின் பாதையில்
அணி சேர்ந்து கொள்.
நீயும்
எங்களோடு ஒருவராய் இரு.

எங்கே போரும்
இரத்தமும்,
வருத்தமும்
துயரமும் தாக்கி,
மக்கள் அழுது
அவதியுற்று,
இடவலம் தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைவிட்டு,
உறவைவிட்டு,
அகதியாய் அல்லல்பட்டு
ஓடுகிறார்களோ,
அங்கே
அவர்களுக்கு
ஆறுதல் கொடுக்கும்
அபயக்கரமாக
உன் கரத்தையும்
நீட்டு.

நீதி கிடைக்காமல்
துயரப்பட்டு
உடைக்கப்பட்ட
உள்ளத்தோடு
வாடிநிற்கும் மக்களுக்கு
ஆறுதலைக் கொடுக்க,
உண்மையை
உரத்துச் சொல்ல
உன்னால் முடியுமா?

எல்லாம் இழந்து,
ஏதுமில்லா நிலையில்
இனியேன்
வாழவேண்டும் என்று
நொந்துபோன
மக்களுக்கு
மறுவாழ்வளிக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரை வெறுக்கும்
சமாதானப் பிரியர்களோடு
நீயும் ஒருவனாக
சேர்ந்துகொள்.

குண்டுக்கு பலியாகி
இரத்த வெள்ளத்தில்
வீதியில்
இறந்து கிடந்த
மனிதனோடு,
உன்னையும் ஒருவனாக்கி
அந்த மரணத்தை
உனது
மரணமாகவே எண்ணி
தியானித்துப்பார்.

வீதியில்
சின்னாபின்னமாய்
சிதைந்து
சிதறிக்கிடந்த
அந்த அப்பாவிகளின்
கோர மரணம்,
உனக்கும்
ஒரு பாடமாக அமையட்டும்..

பதவி தேடி அலையுமிந்த
வெறியர்களால்
நீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நேசத்துக்குரியவரும்
இப்படித்தான் நாளை
கோரமாய்
கொலை
செய்யப்படப் போவதையும்,
உன் சதையும்
உன் தலையும் இப்படித்தான்
வேலிக் கம்பியிலும்
வீதியிலும்
சிதறிக் கிடக்கப் போவதை
உனக்கு உணர்த்தி,
உன் மரணத்தைத் தடுக்க
அந்தப் பிணத்தின் சதைகள்
உனக்கு எச்சரிக்கட்டும்.

எதிர் பாராமல்
குண்டுக்கு
பலியாகிக் கிடந்த
மனித
சடலங்களைப் போன்று,
உனக்கும்
உன் குழந்தைகளுக்கும்
கொடிய குண்டு மரணம்
நடக்கலாம் என்பதை,
இறந்துபோன
அந்த அப்பாவி மக்களின்
மரணம்
உனக்கு போதித்தால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே
உன் மரணத்தைத் தடுக்க,
உன் பிள்ளைகளின்
உயிரைக் காப்பாற்ற,
உன் குடும்பத்தை
இந்தக்
கொலை வெறியின்
பிடியில் இருந்து
காப்பாற்ற,
மீண்டும் இந்த யுத்தம்
நடக்காதிருக்க,
சமாதானப் பிரியர்களோடு
நீயும் ஒருவராய் சேர்ந்துகொள்.
ஆபத்தைத் தடுக்கும்
அமைதி விரும்பிகள் யாரோ
அவர்களோடு
நீயும் ஒருவனாய்ப் போய்ச்சேர்.

எவர் இந்தப் போர்
மீண்டும்
தொடரப்படக்கூடாதென்ற
நினைப்போடு
பக்கம் சாராமல்
உண்மையோடு
உயிர்களை மீட்க
உழைக்கின்றார்களோ,
அவர்களை இனங்கண்டு
அவர்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து கொள்.
மானிட வாழ்க்கையை
தீர்மானிக்க நினைக்கும்
கட்சி, அரசியல்,
மதவாதிகளுக்கு,
விரைவான,
அமைதியான,
சமாதான,
சுமூகத்தீர்வு எது என்று
எடுத்துக் காட்ட,
நீயும்
நீதியை விரும்பும்
இந்த அமைதிப்
பேரணியில்
சேர்ந்து கொள்.

மீண்டும் இந்த
ஆயுத அதிகாரம்
பலம் பெறுமேயானால்,
நாங்கள் மட்டுமல்ல,
நீங்களும் ஒருநாள்
இந்த ஆயுதத்தினால்
கொல்லப் படுவது
நிச்சயமாகும்

ஆயுதத்தை ஆராதித்தால்,
நமக்குத் தெரியாமலே
நமது மரணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமே
ஊக்குவித்தவராவோம்..

உனது மரணத்தை
நீயே ஊக்குவிக்காமல்,
எவ்வளவு விரைவாக
இந்த ஆயுதப்
பிடியில் இருந்து
ஒதுங்க முடியுமோ
அவ்வளவு விரைவாக
ஒதுங்கிவிடு.

அமைதியை விரும்பும்
மனிதர்கள் யாரோ,
அவர்களுடன்
எவ்வளவு சீக்கரம்
சேர முடியுமோ
அவ்வளவு சீக்கிரம்
நீயும் ஒருவனாய்
வந்து சேர்.

மீண்டும் இந்த யுத்தம்
தொடர்ந்தால்
அங்கு
முதல் முதலில்
எரியப் போவது
உனது வீடுதான்.
பள்ளிக்குப் போன உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும்
தேற்றுவாரற்று நாளை
தெருவில்
ஒரு பிடிச்சோற்றுக்காக
பாத்திரம்
ஏந்தப் போகின்றார்கள்.
இந்தப் போர்
அவர்களை மட்டுமல்ல,
உன்னையும் எரிக்கும்,
ஆகவே
அதற்கு முதல்
போரை வெறுக்கும்
சமாதானப் பிரியர்களோடு
நீயும் வந்து சேர்.
போர் விரும்பிகளின்
பலத்தைக் குறைத்து
அவர்களுக்கும்
மனித நேயத்தை
கற்பிக்க வழிசெய்.
இப்போதே இக்கணமே,
உன் ஆதரவை
அமைதியை விரும்பும்
நல்லவர்களுக்கு
முழுமையாய்க் கொடு.

● **நன்றி** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள் :

1. பொழுது புலரட்டும்
2. மீட்பின் சுரங்கள்
3. சுவையும் சுமையும்
4. அவலங்கள்
5. இன்னுமோர் இன்பத்துப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பகை
மொழிப்பகை
மதப்பகை
எமக்கில்லை.

புதிய கதிர்கள்
விரைந்து எங்கள்
பூமியின் முகத்தைப்
புதுப்பிக்கும்.

எங்கள் வானில்
வெள்ளைப் புறா
சிறகுகள் தட்டிப்
பறக்கும்.

அழகிய வெள்ளை
ரோசா எங்கள்
மண்ணில் மலர்ந்து
மணக்கும்.

ISBN 978-955-1372-08

978955137208

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org